# சிங்கள மக்களிடையே ஒரே கட்சி உருவாக வேண்டும்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 34-00

ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

மலர் 11

இதழ்: 100

தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00

ஆறு மாதம் — ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற்பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் வைகாசி 9 ரபி;அவ் 5 வியாழக்கிழமை [22-5-69]

## தமிழர் பிரச்னை தீர கிளிநொச்சிஎம்.பி.யோசனை

கிளிநொச்சி, வியாழன் 'சிங்கள மக்களிடையே ஒரு பெரிய கட்சி தோன்ற வேண்டும். அக்கட்சி ஒரே தலைவரின்கீழ் இயங்கவேண்டும். இவ்விதம் ஏற்படும் போதுதான் தமிழர்களின் பிரச்னைகள் தீரும். பலக் குறைவுள்ள சிங்களக்கட்சிகள் பதவிக்கு வருவதால் தமிழர்கள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு கண்டுவிட முடியாது.'

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

திரு. இரத்தினம் ஆனையிறவு தமிழ்-சிங்கள பாடசாலையில் பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தினால் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடமொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையிலுள்ள இரு பெரிய இனங்களும் தமது தாய்மொழியிலேயே கல்வி கற்று சுமுகமாக நல்லுறவுடன் வாழலாம் என்பதற்கு இப்பாடசாலை ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்கிறது.

ஒரு இனத்தைச் சார்ந்த பிள்ளைக்கு வலுக்கட்டாயமாக தனது தாய்மொழியில்லாத பிறமொழியைத் திணிப்பது துரோகமான செயலாகவே இருக்கும். தன்மானமுள்ள எந்த மனிதனும் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டான் கல்வி அமைச்சர் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகவும் வருந்தத்தக்கது.

திரு. இரத்தினம் குழாய் நீர்த்திட்டம்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் ஆனையிறவு, நட்டுவன்கொட்டி, உமையாள்புரம் முதலிய இடங்களுக்கு குழாய்மூலம் நீர் விநியோகம் விரைவில் கிடைக்குமென்றும் தாம் உள்ளூராட்சி அமைச்சரிடம் இதுபற்றிப்பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவித்தார்.

புலோப்பளை கிராமசபைத் தலைவர் திரு ஏ. ஜி, இராஜசூரியர் பேசுகையில் தமிழ் கட்சிகள் கைத்தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவில்லையெனக் குறிப்பிட்டார்.

# 'வட பகுதி பௌத்த பாடசாலைகளில் தமிழிலே போதனுமொழி

## பெற்றோரின் விருப்பப்படியே பொறுப்பேற்பு'

### கல்வி அமைச்சு அதிகாரி தகவல்

கோட்டை, புதன்

அடுத்த மாதம் 1-ம் திகதி அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளிலும் தமிழே போதனு மொழியாக இருக்குமென கல்வி அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அல்வாய் ஆனந்த கெமகே வித்தியாலயம், அச்சுவேலி வியாசி வித்தியாலயம், கரவெட்டி ஸ்ரீகாந்த் வித்தியாலயம் ஆகிய மூன்று பௌத்த பாடசாலைகளும் அடுத்த மாதம் 1-ம் திகதி அரசாங்கம் பொறுப்பேற்பது உறுதியெனத் தெரிவித்த அந்த சிரேஷ்ட அதிகாரி பெற்றோர்களின் விருப்பத்துக்கிணங்கவே இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கிறதெனக் குறிப்பிட்டார்.

சிங்களமே போதனு மொழியாக இருக்கவேண்டுமென இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னரே இந்த விஷயம் பரிசீலனை செய்யப்படுமென அந்த சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களும், தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் பிரதமரைச் சந்தித்து, பொறுப்பேற்கவிருக்கும் பாடசாலை சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தது தெரிந்ததே.

சித்தன்கேணி பிள்ளையார் ஆலய உற்சவம்

## சகல பக்தர்களும் வெளியே நின்று வழிபட்டனா

சித்தன்கேணி, புதன்

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் முதலாந் திருவிழாவான கொடியேற்று வைபவம் இன்று அமைதியாக நடைபெற்றது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இன்று காலையில் மேற்படி கோவிலுக்கு வந்து தீர்த்தக்கேணியில் கை கால் அலம்பி, கோவிலுள் சென்று வழிபட முயன்ற போது, ஆலய முகாமையாளர்கள் கோவில் பணியாளர்கள் உள்ளே செல்ல முடியுமென்றும், மற்றையோர் வெளியே நின்றுதான் வழிபட வேண்டுமென்றும் தெரிவித்தனர். ஹரிஜனர்கள் உட்பட எல்லோரும் கோவிலுக்கு [illegible] சாதம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

இன்றைய உற்சவத்தின் போது கோவில் குருக்களும், திருவிழா உபயகாரர்களும், கோவில் இசையாளர்களும், பணியாளர்களுமே கோவிலுள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பணியாளர்கள் தவிர ஏனையோர் கோவிலுள்சென்றால், ஹரிஜனர்களும் உட்சென்று வழிபடலாமெனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

கோவிலின் கிழக்கு வீதியில் தற்காலிக பொலிஸ்நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. பொலிஸார் பகல், இரவுத் திருவிழாக்களின் போது [illegible]

## நாவலர் சிலைபற்றி ஔவை துரைசாமி

யாழ்ப்பாணம், வியா.

''சென்னையில் நடந்த உலகத் தமிழராய்ச்சி மகாநாட்டில் நாவலருக்குச் சிலை நிறுவப்படாதது பெருங் குறையாகும். ஆனாலும் இந்தக்குறை விரைவில் தீர்க்கப்படும்'' என்று தமிழக அறிஞர் ஔவை துரைசாமி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று மாலை சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

'நல்லைநகர் தந்த நாவலர்' என்னும் பொருள் பற்றி அவர் பேசினார். திரு. எம் ஸ்ரீகாந்தா தலைமை வகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மகாநாட்டை ஒழுங்கு செய்தவர் என்னுடைய மாணவர்கள். அவர்களிடம் நாவலருக்குச் சிலை நிறுவாதது பற்றி விசாரித்தேன். 'தமிழுக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் பணியாற்றியவர்களுக்கே சிலை நிறுவப்பட்டுள்ளது. சமயத்துக்குப் பணியாற்றியவர்களுக்கும் சிலை நிறுவப்பட வேண்டியது அவசியம். அந்தக்குறை விரைவில் தீர்க்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்'' என்று கூறினார்.

நாவலர் சிலை திறப்பு விழாவுக்கு

## தண்டபாணி தேசிகரும் ஜிளாரினட் நடராஜனும் வருவர்

யாழ்ப்பாணம், வியாழன்

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலை திறப்பு விழாவுக்கு திருவாவடுதுறை ஆதின வித்வான் தண்டபாணி தேசிகரும், சென்னை கிளாரினட் நடராஜன் கோஷ்டியினரும் வருவது நிச்சயப்படுத்தப்பட்டு விட்டது''

சென்னையிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் திரும்பிய ஆறுமுகநாவலர் [illegible]ளைக் கவனிக்கவென இந்தியா சென்றிருந்த திரு. நீதிராசா அங்கு ஒரு வார காலம் தங்கியிருந்து நேற்றுத் திரும்பினர்.

கிளாரினட் நடராஜன் குழுவினரும், தண்டபாணி தேசிகரும் அடுத்த மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள். யாழ்ப்பாணத்தில் ஜூன் 29-ம், 30-ம் திகதிகளிலும், ஜூலை [illegible]

## டாக்டர் பந்துலு கொலை வழக்கு

கொழும்பு, புதன்

டாக்டர் பந்துலு பெரேராவின் கொலை வழக்கு இன்று கொழும்பு பிரதம நீதவான் திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சுப்பையா முத்தையா, ஆறுமுகம் சுப்பிரமணியம், கதிரவேல் ஆண்டி, அந்தோனி பெர்னண்டோ ஆகியோர் இன்று கோர்ட்டில் இவ்வழக்குச் சம்பந்தமாக ஆஜர் செய்யப்பட்டனர்.

முதலாவது எதிரி மீது கொலைக் குற்றச்சாட்டும், நான்கு எதிரிகள்மீதும் டாக்டருடன் சம்பவ சமயம் இருந்த பெண்ணைக் கற்பழிக்க முயன்றதாகக் குற்றஞ்சாட்டியும் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இம்மாதம் 25ந் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

......

## புதிய அமைச்சர் இல்லை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

த்த மாதம் 1-ம் திகதி அர சாங்கம் பொறுப்பேற்பது உறுதியெனத் தெரிவித்த அந்த சிரேஷ்ட அதிகாரி பெற்றோர்களின் விருப்பத் துக்கிணங்கவே இந்தப் விஷயம் பரிசீலனை செய்யப்

கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னரே இந்த

பேற்கவிருக்கும் பாடசாலை சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்னை குறித்து பேச்சு வார்த்தை நடாத்தியிருந்தது தெரிந்ததே.

# அடுத்தநடவடிக்கை பற்றி நாளை தமிழரசுக்குழு ஆராயும்

யாழ்ப்பாணம், வியாழன்

**வடபகுதியிலுள்ள 3 பௌத்த பாடசாலை விவகாரமாக தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி ஆராய்வதற்காக தமிழரசுக்கட்சியின் செயற்குழு நாளைக்காலை யாழ்ப்பாணத்தில் கூடுகின்றது. இதற்கிடையில் பிரதமருடன் இது சம்பந்தமாக நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின் பெறுபேருக சாதகமான பதில் எதாவது கிடைக்கலாமென்றும் தமிழரசுத் தலைமைப் பீடமும், அரசியல் வட்டாரங்களும் நம்பிக்கையாக எதிர் பார்க்கின்றன.**

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை தமிழரசோ, தமிழ்க்காங்கிரஸோ எதிர்க்கவில்லை. இம்மூன்று பாடசாலைகளிலும் தமிழே போதனு மொழியாக இருக்கவேண்டுமென்றே இருகட்சித் தூதுக் குழுக்களும் பிரதமரிடம் தமது பேச்சுவார்த்தையில் வலியுறுத்தியிருந்தன.

மிகக் குறுகிய காலத்தில் இப்பிரச்னையைத் தீர்க்க வேண்டியிருப்பதால் இம் மாதம் 27-ம் திகதி கெய்ரோவுக்குப் பயணமாவதற்கு முன்னர் கல்வி அமைச்சரையும், தமிழரசு தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளையும் சமாதானப்படுத் தக்கூடிய தான ஒரு முடிவை பிரதமர் எடுப்பார் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைமைப் பீடமும் முழுநம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றது.

இதற்கிடையில் அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் பாடசாலைகளில் ஒன்ருன கரவெட்டி ஸ்ரீகாந்த வித்தியாலயத்தைப் பார்வையிட கல்விவித்தியாதிபதி நாளை மறுதினம் இங்கு வருகின்ருர்.

நாளைகாலை நடைபெறும் தமிழரசுச் செயற்குழுக் கூட்டத்தை அடுத்து, கண்டனக் கூட்டம் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது. (கா நி)

## இவ்வருடமுடிவிற்குள் 25000பேர் தாயகம்திரும்புவர்

கோட்டை, புதன்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இவ்வருட முடிவிற்குள் மேலும் 25,000 இந்திய வம்சாவழியினர் தாய் நாடு திரும்புவதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் கடந்த வாரம் செய்து முடித்துள்ளது.

இலங்கையில் இருந்துநாடு திரும்புவோர் தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் குடியேறுவதற்கான வழிவகைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளதை அறிந்த பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இந்திய அரசாங்கத்தின் முயற்சிக்கேற்ப நாடு திரும்புவோர் தொகையை அதிகரிப்பதற்கான 'நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டவிரோத குடியேற்றஅதிகாரிகளுக்கும் தொழிலமைச்சருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

பிரதமரின் உத்தரவைத் தொடர்ந்து தொழிலமைச்சர் நாடு திரும்புபவர்களில் சேமநல நிதி வழங்கப்படவிருப்போருக்கு விரைவாக வழங்குவதற்காவன செய்வதற்கு சேமநலநிதி வழங்கும் விசேஷ பகுதியொன்றை நிறுவியுள்ளார். ஏற்கனவே இந் நிதிக்கு விண்ணப்பித்த 4000 பேர்களின் விண்ணப்பங்களை உடனடியாக இவ் விசேஷ பகுதி கவனிக்கவுள்ளது

முன்னர் இந் நிதி வழங்குவதில் தாமதமேற்பட்டதற்குக் காரணம் தோட்டத் தொழிலாளர்கள் முதலாளிகள் ஆகியோரிடம் இருந்து இது சம்பந்தமாக கிடைக்கும் விபரங்கள் திருப்தி கரமானவைகளாக இல்லாததே என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்பொழுது தொழிலமைச்சு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையினுல் சேமநலநிதிகோருவோருக்கு அவர்களது விண்ணப்பங்களிலுள்ள விபரங்கள் சரியானவைகளாக விருப்பின் இருவாரத்துக்குள் சேமநல நிதி வழங்கப்படுமென பிரஸ்தாப அமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவழியினரை தாயகம் அனுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கத்துக்கு இங்குள்ள இந்திய தூதரகமும் உதவி செய்யுமெனப் பிரதமர் கூறியுள்ளார்.

...முடியுமென்றும், மற்றையோர் வெளியே நின்றுதான் வழிபட வேண்டுமென்றும் தெரிவித்ததை தொடர்ந்து ஹரிஜனர்கள் உட்பட எல்லோ[illegible] கோவிலுக்கு வெளியே நின்று சுவாமியை வழிபட்டனர். பகல் திருவிழாவின் முடிவில் பிர

...வர் கூறினர். கோவிலின் கிழக்கு வீதியில் தற்காலிக பொலிஸ்நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. பொலிஸார் பகல், இரவுத் திருவிழாக்க[illegible] போது அமைதியை [illegible] நாட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

## வகுப்புவாத சம்பவங்கள் குறையவில்லை'

புதுடில்லி, மே 21

நாட்டில் வகுப்புவாத சம்பவங்கள் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எதுவித அபிவிருத்தியும் ஏற்படவில்லை என மத்திய அரசாங்க உள்துறை அமைச்சர் திரு. வை. பி. சவான் ராஜ்யமுதல் அமைச்சர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்வித சம்பவங்கள் ஏற்படாதவாறு முன் ஏற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்குமாறு திரு சவான் ராஜ்ய முதலமைச்சர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சீன மீது ரஷ்ய ஜனதிபதி கண்டனம்

உலன்பட்டோர், மே 21

சீனக்கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்துவதாக ரஷ்ய ஜனதிபதி பொட்கோர்ணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மங்கோலியாவில் தமக்களிக்கப்பட்ட அரசாங்க விருந்திற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே திரு. பொட்கோர்ணி மேற்கண்டவாறு கூறினர்.

சீனக் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு. மாசேதுங்குக்கு சீனவில் எதிர்ப்பு வலுத்து வருகிறதென மேலும் கூறிய திரு. பொட்கோர்ணி சீன ஏகாதிபத்தியவாதிகளின் வலையில் விழுந்துள்ளதாகக் குற்றம் சாட்டினர்.

### அதிகமானேர் மாணவிகள்

யாழ்ப்பாணம், வியா.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையால் நடாத்தப்படும் மாணவர்கள் பேச்சுப்போட்டிக்கு இதுவரை 174 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் இவற்றில் 100 பேர் மாணவிகள் என்றும் போட்டி அமைப்பாளர் தெரிவித்தார். இதற்கான விண்ணப்பங்கள் இன்று மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா

# யாழ். மாவட்ட வீரர்களுக்கான 26 மைல் மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

'ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு அடுத்தமாதம் நடைபெறும் பல்வேறுவிதமான விளையாட்டுப்போட்டிகளிலும் 26 மைல் மரதன் ஓட்டப் போட்டி மிகவும் முக்கியமான தொன்ருகும்.

அடுத்த மாதம் 12-ம் 13-ம் 14-ம் திகதிகளில் நடைபெறும் பத்தாண்டு விழாவின் இறுதி நாளான 14-ம் திகதி இப்போட்டி நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல வீரர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். இதற்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி ஜூன் மாதம் 5-ம் திகதியாகும்.

இதற்கான விண்ணப்பங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் விண்ணப்பப் பத்திரத்தில் பூர்த்திசெய்யப்பட்டு 'ஈழநாடு' தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

போட்டி பற்றிய விபரங்களும், போட்டி நடைபெறும் பாதையும், விண்ணப்பப்பத்திரங்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பல விலையுயர்ந்த பரிசில்கள் அன்றிரவு யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் நடைபெறும் ஈழநாடு கலைவிழாவில் வைத்து வழங்கப்படும். (கா-நி)

...தேசிகரும், சென்னை [illegible] நடராஜன் கோஷ்டியினரும் வருவது நிச்சயப் படுத்தப்பட்டு விட்டது''

சென்னையிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் திரும்பிய ஆறுமுகநாவலர் சபைப் பொருளாளரான செனட்டர் கி. நீதிராஜா இத் தகவலைத் தெரிவித்தார்.

நாவலர் விழா ஒழுங்குக[illegible] [illegible] நடராஜன் குழுவினரும், தண்டபாணி தேசிகரும் அடுத்த மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள். யாழ்ப்பாணத்தில் ஜூன் 29-ம், 30-ம் திகதிகளிலும், ஜூலை 1-ம் திகதியிலும் நடைபெறும் நாவலர் பெருவிழாவில் இவர்கள் நிகழ்ச்சிகள் அளிப்பார்கள். (கா. நி)

## அட்டன், தலவாக்கொலையில் கொந்தளிப்பான நிலைமை

### 19 பேரை காணவில்லை

கொழும்பு, புதன்

அட்டன், தலவாக்கொலைப் பகுதிகளில் தொடர்ந்து கொந்தளிப்பான நிலைமை நிலவிவருகிறது. தலவாக்கொலையில் 19 தோட்டத் தொழிலாளர்களைத் திடீரெனக் காணவில்லையாம்.

இங்குள்ள ஓடையொன்றில் காணப்பட்ட சடலமொன்று காணமற்போன தொழிலாளர்களில் ஒருவராக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது

தலவாக்கொல்லை நகரசபைத் தலைவர் மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஏ. லோரஸ் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். அட்டன், தலவாக்கொலைப் பகுதிகளுக்குக் கூடுதலான பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### இன்று

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பப் பாடசாலையின் 10-வது ஆண்டு நிறைவு விழா இன்றுமாலை கல்லூரி அதிபர் திரு எஸ். டி. ஜெயசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தொழில்நுட்ப துணைக் கல்விமா இயக்குனர் கலாநிதி எஸ். டி. சில்வா இவ் விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

டது.

......

### புதிய அமைச்சர் இல்லை

சென்னை, மே 21

காலஞ்சென்ற தமிழ்நாடு உணவு விவசாய அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமியின் அமைச்சுப் பொறுப்பு 4 அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட விருக்கிறது. தற்போதைக்கு அவருக்குப் பதிலாக புதிய அமைச்சரை நியமிக்கும் திட்டம் தமக்கு இல்லையென முதலமைச்சர் திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்காரியதரிசிக்கான தேர்தல் வருகிற ஜூலை மாதம் நடைபெறுமென முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

### காந்திவிழா

அனலைதவு, புதன்

அனலைதீவு மத்திய சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள காந்தி நூற்ருண்டு விழா இம்மாதம் 23-ம் திகதி அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் [illegible] பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார். நாடகமும் கவியரங்கும் விழாவில் இடம்பெறும்

# 'இலங்கைவாழ் தமிழ்மக்கள் தம்பண்பாட்டில்சிறிதேனும்குறையவில்லை'

### யாழ்ப்பாணத்தில் ஔவை துரைசாமி சொன்னர்

யாழ்ப்பாணம், வியாழன்

''இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமிழ்ப் பண்பாட்டில் சிறிதளவும் குறையாமல் தங்கள் கலை, கலாச்சாரத்தைப் பாதுகாத்து வருவது கண்டு நான் மிகவும் பேருவகை கொள்கிறேன்.''

நேற்றுக் காலை விமானத்தில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சென்னை பேராசிரியர் ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை பலாலிவிமான நிலையத்தில் வைத்து இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை 11-20 மணிக்கு திருச்சியிலிருந்து விமானத்தில் பலாலியில் வந்திறங்கிய ஔவை துரைச்சாமிப்பிள்ளையுடன் செனட்டர் ரி. நீதிராஜாவும் வந்திருந்தார்.

சேக்கிழார் மன்றத் தலைவரான திரு. எம். ஸ்ரீகாந்தா, உபதலைவர் முதலியார் முத்துத்தம்பி, செயலாளர் திரு. க. கி. நடராசன் ஆகியோர் ஔவை துரைச்சாமிப்பிள்ளைக்கு விமானநிலையத்தில் வைத்து மலர்மாலை அணிவித்து கௌரவித்தார்கள்.

திரு. துரைச்சாமிப் பிள்ளை பத்திரிகையாளர்கள் மத்தியில் மேலும் பேசுகையில், மீண்டும் தான் யாழ்ப்பாணம் வந்திருப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும், சேக்கிழார் பெருமானுக்கு இலங்கை மக்கள் அக்கறை காட்டி விழா எடுப்பது பாராட்டப்படவேண்டியதென்றும், சேக்கிழார்விழாவிலும், நாவலர் பெருமான் நல்விழா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவே தான் வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சேக்கிழார் மன்றத்தின் நான்காவது சேக்கிழார் விழா இன்று காலை யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

காலை விழாவில் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார், மு. ஞானப்பிரகாசர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாலை விழாவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமிமண்டபத்தில் ஔவை துரைச்சாமிப் பிள்ளை சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மெக்கானிக்கல் அப்பிறென்ரிஸ். எமது வேலைத்தலத்தில் சிலிண்டர் றிபோறிங், றீசிலீவிங், கிறுங்சாவ்ற் றிகிறைன்டிங், கெட் பேசிங், மற்றும் பல யந்திர சீர்படுத்தும் வேலைகள் பழக 16—20 வயதுக்குள் குறைந்தது செ. எஸ். சி. தராதரத்துள் ஆங்கிலம் கணக்கு பாடங்களில் சித்தியடைந்தவர்களாய் இருத்தல் வேண்டும். ராமகிருஸ்ணுஸ், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1147

லொறி, வான், கார் செலுத்தக்கூடிய தேர்ச்சி பெற்ற அனுபவம் வாய்ந்த டிறைவர்கள் தேவை அத்தாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். லொறி, வான்களில் வேலை செய்யக்கூடிய திறமை வாய்ந்த கிளீனர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ஆ.ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், 166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1146

குறைந்த பட்சம் மூன்று வருட அனுபவமுள்ள சாதுவான குணமுள்ள ட்றைவர் சக பியோன் தேவை. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. சமீபத்தில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் தேவையான சம்பளத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல- 1139, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1139

### விற்பனைக்கு

மோட்டார் லோஞ் மரேன் ''பி-சிக்ஸ்'' 6 சிலிண்டர் பேக்கின் என்ஜின் இரண்டும், 36 அடி நீளமுள்ள வள்ளமும் விற்பனைக்கு இருக்கின்றது. கா. க. விசுவலிங்கம், 170, கஸ்டம்ஸ் றேட், திருக்கோணமலை. 1145

ஐந்தரை சாண் உயரமுள்ள 19 மாசமான, வெண்கல மயிலை நாம்பனும் இரு பசுக்களும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மரியாம்பிள்ளை, கச்சாய் வேதக் கோவிலடி, கொடிகாமம். 1137

ராஜா 129வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 22—5—69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 கல்விஒலிபரப்பு, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடி விளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப் பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின் இசை, 7-35 குறுக்கெழுத்துப்போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த
பெரிய இடத்துப் பெண்
Today 10.30 a. m. only
The sex life of cities in the world
Forbidden Cities
(Eastman color)
(Strictly for Adults)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா நடித்த
கலாட்டா கல்யாணம்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.



யாழ். மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கு நான்கு நாட்களாக உதைபந்தாட்டப் பயிற்சி அளித்த, அகில இலங்கைப் பாடசாலை உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. அல்பேர்ட் பெர்ணண்டோ உதைபந்தாட்டத்தைப் பற்றி வீரர்களுக்கு விளக்கிக்கொண்டிருக்கிறார். படப்பிடிப்பு: பிறின்ஸ் பபி

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா வலைப்பந்தாட்டப் போட்டி

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மேற்பிரிவில் வெற்றி

## கீழ்ப்பிரிவில் வடமராட்சி இந்துமகளிர்

உடுப்பிட்டி, புதன்
ஈழநாடுபத்தாவது ஆண்டு விழாவையொட்டி 'ஈழநாடு' வெற்றிக் கேடயத்துக்காக கல்விப்பகுதியினரால் நடாத்தப்படும் மகளிர் கல்லூரிகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி நேற்று மாலை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

மேற்பிரிவுக்கான போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன. இரு கோஷடி மாணவிகளும் ஆரம்பமுதல் இறுதிவரை விறுவிறுப்பாக விளையாடினர். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 13 புள்ளிகளையும் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி 12 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன.

இப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வெற்றிபெற்றது. திருமதிகள் வேலாயுதம் குலசிங்கம் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

கீழ்ப் பிரிவினருக்கான போட்டியில் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியும் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியும்மோதின இப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி மாணவிகள் 9 3 புள்ளிகளால் வெற்றி பெற்றனர்.

திருமதிகள்பி. இராஜநாயகம், பீ. முத்து ஆகியோர்

### உதைபந்தாட்ட மோதல்கள்

யாழ்ப்பாணம், வியா.
யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கீழ் வரும் கோஷ்டிகள் இன்றும் நாளையும் கோட்டை மைதானத்தில் மோதுகின்றன.

**இன்றைய ஆட்டம்**

முதல் நடைபெறும் பி. ஆட்டத்தில் வல்வெட்டித்துறை 'புளூஸ்' விளையாட்டுக்கழகமும் நெல்லிப்பழை கிறுஸ் கொடபர்ஸ் விளையாட்டுக் கழகமும் 'ஏ' பிரிவில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகமும் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன

**நாளைய ஆட்டம்**

நாளை நடைபெறும் 'பி' பிரிவு ஆட்டத்தில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் 'ஏ' பிரிவு ஆட்டத்தில் கிறீன்ஸ்பீல்ட் விளையாட்டுக் கழகமும் குருநகர் யுனைட்டெட் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன,

(தே. நி)

### போட்டி முடிவுகள்

சுழிபுரம், புதன்
பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியை ஒட்டி சென்ற திங்கட்கிழமை மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது 26-க்கு மேற்பட்ட வீரர்கள் போட்டியில் கலந்து கொண்டனர். பி. மரியதாஸ், ஆர். சிவபாலசுப்பிரமணியம், ஆர். ஏ. இராசா, பி. இராசதுரை, வி. நமசிவாயம் ஆகியோர் முறையே வெற்றி பெற்றனர். போட்டியில் கலந்து கொண்ட யாவருக்கும் கல்லூரி அதிபர் திரு. என். சிவமீனம் நன்றி கூறினார்.

### கோப்பாய் ஆலய உற்சவம்

புத்தூர், புதன்
கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவிருக்கின்றது. இம் மாதம் 30, [illegible]-ம் திகதிகளில், முறையே தேர் தீர்த்தத் திரு விழாக்கள் நடைபெற விருக்கின்றன.

### மலைவாளக் கோல விழா

### அர்ச் பிலிப்பு நேரியார் திருநாள்

யாழ்ப்பாணம், வியா.
செம்பியன்பற்று அர்ச் பிலிப்பு நேரியார் திருநாள் வருடாந்த உற்சவத்திற்கான நலநாள் ஆரம்பமாகியுள்ளது தினமும் மாலையில் திவ்விய பூசைப்பலியும் தேவற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்று வருகின்றது.

திருநாளின் இறுதித் தினத்திற்கு முந்திய மூன்று நாட்களிலும் பாடசாலைப் பிள்ளைகட்கும் பொது மக்கட்கும் ஓர் ஞானஒடுக்கம் நடைபெறும் இவ் வைபவத்தில் வண பிதா ரீ சவுந்தரநாயகம் பிரசங்கங்கள் நடத்துவார்.

இம்மாதம் 25-ம் தேதி மாலை திவ்விய நற்கருணை ஆராதனையும் திவ்விய பூசைப்பலியும் நடைபெறும் மறுநாட்காலை திவ்விய பாடற்பூசையும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பருத்தித்துறை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து கோவிலடிவரை விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருநாளுக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் கட்டளைக்குரவர் வண பிதா ஏ. லெபோன் ஓ. எம். ஐ. கவனித்து வருகிறார்கள்.

## திருமலைச் செய்திகள்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

### குடிசையில் பெண்ணின் சடலம்

குச்சவெளி பொலிஸ்பகுதியிலிருந்துசுமார் 1 மைலுக்கப்பால் ஒரு குடிசையில் 75 வயது மதிக்கத் தக்க இனம் தெரியாத ஒரு பெண்ணின் சடலம் காணப்பட்டது. இம் மரணம் பற்றி பொலீசார் புலன் விசாரணை செய்கின்றனர்

### 600 ஏக்கருக்கு நீர்ப்பாசனம்

திருக்கோணமலை மாவட்டத்தில் பேராறு அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 600 ஏக்கர் முடிக்குடிய காணிக்கு நீர்ப்பாசன வசதி இந்த ஆண்டில்செய்து கொடுக்கப்படும். 1952-53ம் ஆண்டு செலவு நிலையில்

## ஆசிரியதொழிலிலிருந்து ஓய்வுபெறும்சமயதொண்டர்

யாழ்ப்பாணம், வியாழன்
இணுவில் ஸ்ரீ அம்பிகைபாகர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 35 வருடங்களாக உதவியாசிரியராகவும் தலைமையாசிரியராகவும் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு. வை. கதிர்காமநாதனுக்கு அப்பாடசாலை பழைய மாணவரும் அவ்வூர் மக்களும் நாளை பாராட்டு விழா வொன்று நடாத்துகின்றனர்.

திரு. கதிர்காமநாதன் இணுவிலில் தமிழ் வளர்த்த பரம்பரையைச் சேர்ந்தவர் இவரின் தந்தை மேற்படி பாடசாலையின் தலைவராகக் கடமையாற்றியவர். இவரது பேரனார் திரு. அம்பிகைபாக உபாத்தியாயர் தணிகைப்புராண உரையாசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

1909-ம் ஆண்டு பிறந்தவரான திரு. கதிர்காமநாதன் தனது இளமைக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியசாலையிலேயே கற்றார், பின்னர் யாழ். இந்துக்கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்றார். பாடசாலையில் பயில்வது தவிர மற்றும் தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் தனது தந்தையினிடத்தும் சிறிய தந்தையினிடத்தும் கேட்டுக் கற்றார்.

1930-ம் ஆண்டில் ஆங்கிலக் கல்வியை நிறுத்திவிட்டு திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் கல்வி கற்று ஆசிரியபயிற்சியை திறமையாக மேற்கொண்டு தேறினார்.

1934-ல்இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி தந்தையின் மரணத்துக்குப் பின்னர் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். பாடசாலை நிர்வாகத்தை மிகக் கவனமாகக் கவனித்துவந்த இவர் தமிழ் பற்றும் சைவப் பற்றுமுடையவர் ஆதலால் சைவசித்தாந்தப் பிரசாரகராகவும் திகழ்ந்தார். சைவாசாரப்படி ஒழுகும் இவர் தினசரிசமயத் தொண்டுகள் புரிவதில்தவறுவதில்லை இணுவில் இந்துசமய வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகப் பல வருடங்கள் திரு. கதிர்காமநாதன் கடமையாற்றி வருகிறார்.

இணுவைப் பதிகம், இணுவை இரட்டைமணிமாலை க்ஷேத்திர திருவெண்பா உரை ஆகிய நூல்களை எழுதியதோடு இவர் பிள்ளையார் கதை, கதிர்காம வேலவர், பிள்ளையார் ஊஞ்சல் ஆகிய நூல்களைப் பதிப்பித்துமுள்ளார்.

## பட்டினசபை பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.
''வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் பாரபட்சமற்ற சேவையைப் பாரட்டும் தீர்மானமொன்று சுன்ணுகம் பட்டினசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வடபகுதியில் தமிழ் மக்கள் மத்தியில் தற்போது நிலவரும்சமத்துவப் போராட்டமும் சமூககலவரங்களும் நடைபெற்று வருகையில் துணிவுடனும் நேர்மையுடனும்சேவையாற்றும் பொலிஸ் சுப்பிரிண்டனின் சேவை பராட்டப் படவேண்டியது என்று தெரிவிக்கப் பட்டது. இத் தீர்மானத்தை சந்தைவட்டாரப் பிரதிநிதி திரு. க. ஹென்றி கொண்டு வந்திருந்தார்.

இப்பாராட்டுத் தீர்மானத்தின் பிரதியை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு திரு. அலரிக்அபய குணவர்த்தனவுக்கு அனுப்புவதோடு, திரு. ஆர். சுந்தரலிங்கத்தைத் தொடர்ந்தும் வடபகுதியில் பொலிஸ் சுப்பிரிண்டனக கடமையாற்ற விடுமாறு கோருவதென்றும் தீர்மானிக்கப் பட்டது. (கா, நி)

'ஈழநாடு'

## முதலெழுத்துப்போட்டி-5

நான்காவது போட்டியில் நேயர்கள் எமது அரசாங்க வேலைப்பகுதியை அருமையாக வர்ணித்து விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாட்டா கல்யாணம்

ராஜா (யாழ்ப்பாணம்) 129வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
**ஒளிவிளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்


REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Julie Andrews &
Dick van duke
in
MARY POPPINS

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-மாலினி
நடித்த
**சபாஷ் மீனா**

MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00 & 9-45 P.M.
HAMBURG
OFFLIMITS

ராணி
[யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
ஜெமினி
சாவித்திரி
நடித்த
**பிரேம பாசம்**
(புதிய
கொப்பி)

இங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னார்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனோரமா
நடித்த
**ஆ ல ய ம்**
இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா மைலன்
(கொழும்பு)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)


ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடிக்கும்
**அதே கண்கள்**


கல்லூரி மாணவிகள் 9 3 புள்ளிகளால் வெற்றி பெற்றனர்.

திருமதிகள் பி. இராஜநாயகம். பீ. முத்து ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கலந்து கொண்டனர்.

ஏராளமான மாணவிகள் இப் போட்டிகளைக் கண்டு களிததனர்.

## மணவாளக் கோல விழா

சுழிபுரம், புதன் வட்டுக்கோட்டை- சங்கரத்தை பிட்டியம்பதி பத்திர காளி அம்பாள் சமேத வீர பத்ரசுவாமி கோவில் மணவாளக் கோல விழா [illegible]டை பெற்றது பூசைகள் [illegible]ரம் மஸ்ரீ.வை. சபாரத்தினக் குருக்களால் நடாத்தப் பட்டன.

... திகதிகளில், முறையே தேர் தீர்த்தத் திரு விழாக்கள் நடைபெற விருக்கின்றன.

## இன்றைய பலன்

சௌமிய வருடம்
22-5-69

வியாழக்கிழமை
வைகாசி 9-ந் திகதி

திதி- சஷ்டி இரவு 12-33 மேல் சப்தமி.

நட்சத்திரம்- பூசம் மாலை 5-46 மேல் ஆயிலியம்.

ராகுகாலம் 1-23 — 2-53.

சுபநேரம்- 7-23 8-53.

---

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு நல்லாண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வு, வர்த்தகர்களுக்கு வளமான செல்வமும் சித்த வைத்தியர்கள் வாழ்வில் சிறப்பு மிகுதியும் வனிதையர் வாழ்வில் வஞ்சகர் குறுக்கீடும் உண்டாம்

---

மேஷம்- புயல் மோதும் பொன்னான நெஞ்சம்.

ரிஷபம்- கற்றம் வாழ்த்தும். துரிதப் போக்கு.

மிதுனம்- சிந்தையில் குழப்பம், சிறிய தலையிடி.

கடகம்- அரசபயம், அவதானம் வேண்டும்.

சிம்மம்- பந்தமும், பாசமும் பண்புடன் வரும்

கன்னி- மூர்க்கர் தொல்லை, மூளைக்குவேலை.

துலாம்- வாகனசுகம் வரவிலும் நலன்.

விருச்சிகம்- பாசப் பிணைப்பு, பரவசநிலை.

தனுசு- உறவாடிக் கெடுப்பர் உஷாராகஇரு

மகரம்- கலையின் பெயரால் காதல்வலை.

கும்பம்- இரும்பு மனம் வேண்டாம், வருந்தவும் நேரிடும்.

மீனம்- பிதாவழிச்சுகம் பெரியோர் ஆதரவு,

— சோதிடக்கலாநிதி —

திருமலைவேலுப்பிள்ளை

'ஈழநாடு'

## 10வது ஆண்டு நிறைவுவிழா

# விளையாட்டுப்போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழ்க் குறிப்பிடப்படும் விளையாட்டுக்கள் ஜூன் 3-ம் திகதி தொடக்கம் நடாத்தப்பட்டு இறுதிப் போட்டிகள் ஜூன் மாதம் 12, 13, 14-ம் திகதிகளில் நடாத்தப்படும்.

### விளையாட்டுக்கள்:

1. மரதன் ஓட்டம்-26 மைல்-யாழ்ப்பாண மாவட்டம்
2. கைப்பந்தாட்டப் போட்டி-இன்ரர் கிளப்
3. கூடைப் பந்தாட்டப் போட்டி-பாடசாலைகளுக்கு
4. கால்பந்தாட்டம் யாழ்ப்பாண மாவட்டம்
5. வலைப்பந்தாட்டம்-பாடசாலைகளுக்கு
6. தாச்சி

மேற்படி விளையாட்டுகளில் வெற்றி பெறுவோருக்கு பலவித கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படும். இப்போட்டி சம்பந்தமான விபரங்களும், நிபந்தனைகளும் 'ஈழநாடு' பத்திரிகையில் அடிக்கடி பிரசுரிக்கப்படும்.

ஒரு போட்டிக்கு ஒரு கூப்பன் வீதம் அனுப்பப்படல் வேண்டும்.

---

### விளையாட்டுப் போட்டி கூப்பன்

1. ஜூன்மாதம் 1-ம் திகதிக்கு முன் ஆறுமாதங்களுக்குத் தொடர்ந்து யாழ்மாவட்டத்தில் நிரந்தர வாசியாக இருந்தேன்.
2. நான்பங்குபற்றும் விளையாட்டின் விபரம்...
.................................................
.................................................
3. இப்போட்டியின்போது தகராறுகள் ஏற்படின் மத்தியஸ்தர்களின் தீர்ப்பை ஏற்கத் தயாராக உள்ளேன்.
4. இப்போட்டியில் எனதுவிருப்பத்தின் பேரிலேயே பங்குபற்றும் நான் போட்டியின்போது காயங்கள் ஏற்படின் அதற்குநஷ்டஈடு கோரமாட்டேன்'
5. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு நான் தெரிவித்த விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென உறுதிப்படுத்துகிறேன்.

.............................
கையொப்பம்

விலாசம்
.............................
.............................
.............................

... குரிய 600 ஏக்கர் முடிக்குடிய காணிக்கு நீர்ப்பாசன வசதி இந்த ஆண்டில்செய்து கொடுக்கப்படும். 1952-53ம் ஆண்டு செலவு நிலையில் இதற்கான ஒதுக்கல் செய்யப்பட்டிருந்தும் கூட, இம் மாவட்டத்திற்கு அரசாங்க அதிபராக வந்த ஒவ்வொருவரும் இந்தத் திட்டத்தைப் பூர்த்தியாக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தியிருந்தும் இது காலவரை எந்தவித ஆக்க முயற்சியும் கையாளப்படாதிருந்தது. தற்போதைய அரசாங்க அதிபரால் மீண்டும் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு, திட்டம் நிறைவேறியுள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 200க்கும் மேலான குடும்பங்கள் நன்டையடையும்.

### ஜுரம்

கொட்டியாபுரப்பற்றுப் பகுதியில் அதிதீவிரமாகப் பரவி வந்த மலேரியா நோய் தடுக்கப்பட்டபின் இப்பகுதி எங்கிலும் இப்பொழுது ஒருவித சுரம் ஏற்பட்டு மக்களைப் பெரிதும் வாட்டி வதைக்கிறது.

### திருவள்ளுவர் முன்னேற்றக் கழகம்

திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத்தின் ஆரம்பக் கூட்டம் ஒன்று செல்வன் வே. தங்கராசா தலைமையில் அவரில்லத்தில் நடைபெற்றது. செயற்குழுஉறுப்பினர்கள் வருமாறு: தலைவர் திரு. மு. வைரமுத்து உபதலைவர்: திரு. செ. நாகரத்தினம். பொதுசெயலாளர் திரு.வே. தங்கராசா, உபசெயலாளர் திரு. வ. தங்கராசா, பொருளாளர் திரு. மு. கிருஷ்ணபிள்ளை, உபபொருளாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம்.

### பிரதமரிடம் கோரிக்கை

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கூட்டுஸ்தாபனங்களுக்கு ஊழியர்களைத் தெரிவு செய்யும் போது திருமலை மாவட்டத்தில் உள்ளவர்களில் 25 வீதத்தினரை யாவது வேலைக்குச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மூதூர் முதல் எம். பி. ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி, பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவைக் கேட்டுள்ளார். கில் பேசிய மூதூர் முதல் எம். பி. ஜனாப் எம். ஈ. எச். முஹம்மதலி குறிப்பிட்டார் உதவி ஸ்தலஸ்தாபன அதிகாரி திரு. டி. வாமதேவன் தலைமைவகித்தஇக்க த்தரங்கில் அரசாங்க அதிபர் உட்பட மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர்களும் காரியாதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர். திருமலை நகர மண்டபத்தில் கருத்தரங்கம் இடம் பெற்றது.

## முதலெழுத்துப் போட்டி

நான்காவது போட்டியில் நேயர்கள் எமது அரசாங்க வேலைப்பகுதியை அருமையாக வர்ணித்து விட்டார்கள்.

### 1-ம் பரிசு பெறும் விடை

**'அடிக்கலாம் வேண்டிய பணம்'**

இதை எழுதியவர்: இ. இரஞ்சினி மே./பா. க. இரத்தினசபாபதி, புலோலி தெற்கு, பருத்தித்துறை.

### 2-ம் பரிசு

**'அண்டி வேரறுத்து பசியாறுவோர்'**

எழுதியவர்: செல்வன் செ. கனகராசா, மூத்தவிநாயகர் கோவில் ஒழுங்கை, ஆனைக் கோட்டை.

### பாராட்டுக்குரியவை

பின்வரும் விடைகளை எழுதிய நேயர்களை போட்டிக்குழு பாராட்டுகிறது: 'அஞ்சாது வேட்டையாடும் பஞ்சாயம்', (செ. அ. விமலநாயகம், ஜேசலின் கோட், ஏழாலை தெற்கு, சுன்னுகம் 'அந்தரங்கமாக வேலைபார்த்து பதுக்குபவர்கள்', (இ. சந்திரன், மயிலிட்டி, காங்கேசன்துறை) 'அடியோடு வேரறுக்கும் பணப்பித்தர்', (பொ. சந்திரலிங்கம், நம். 5, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்).

### இன்றைய போட்டி

'இலங்கை மாதர் முன்னேற்ற சம்மேளனம்' என்ற பெயரில் வரும் இ. மா மு. ச. என்ற முதலெழுத்துகளுக்குபொருத்தமான, ஹாஸ்யமான இன்னொரு பெயரைக் கொடுங்கள் பார்ப்போம்.

### நிபந்தனைகள்

விடையைக் கீழ்க்காணப்படும் கூப்பனில் நிரப்பி, உங்கள் பெயரையும், விலாசத்தையும் தெளிவாக அதில் எழுதி அனுப்புதல் வேண்டும். அனுப்பும் விலாசம்: **முதலெழுத்துப் போட்டி (5) 'ஈழநாடு', த. பெ இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். ஒருவர் எத்தனை விடைகளை யாவது எழுதி அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையும் கூப்பனில் எழுதப்பட வேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. விடைகள் 25-5-69க்கு முன் எமக்கு வந்து சேர வேண்டும். மிகச்சிறந்த விடைக்குப் பசுப் பணமாக ரூபா 10ம், இரண்டாவதுக்கு ரூபா 5ம் வழங்கப்படும். வெற்றிபெறுபவர்களின் பெயரும் விலாசமும் முதலெழுத்துப் போட்டி (6) வெளியாகும் போது தெரிவிக்கப்படும்.

'ஈழநாடு'
**முதலெழுத்துப் போட்டி-(5)**

விடை: .............................
.............................

பெயர்: .............................

விலாசம்: .............................
.............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்கள் வழங்குமாறு மலேஷியா பிரிட்டனிடம் கோரிக்கை

## சீனுவின் குற்றச்சாட்டு

கோலாலம்பூர், மே 21

மலேஸிய பாதுகாப்புப் படைகளைப் பலப்படுத்த ஆயுதம் மற்றும் வாகன உதவிகளை வழங்குமாறு மலேஸிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் பிரிட்டனையும் அவுஸ்திரேலியாவையும் கேட்டுள்ளார்.

இத்தக் கோரிக்கையை அவர் இங்குள்ள பிரிட்டிஷ் அவுஸ்திரேலிய தூதர்கள் மூலம் விடுத்துள்ளார்.

மலேஸியாவின்கோரிக்கை பற்றி அவுஸ்திரேலிய பிரதமர் கருத்து வெளியிடுகையில், மலேஸியாவிடமிருந்து தனக்குத் தேவையான ஆயுத வாகன முழு விபரங்களும் கிடைத்ததும் இது பற்றிப் பரிசிலனைசெய்யப் படுமெனத் தெரிவித்தார்.

மலேஸியாவில் கலவரங்கள் மீண்டும் தலைதூக்காதிருக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதமர் துங்கு தெரிவித்துள்ளார்.

### சீனு குற்றச்சாட்டு

பீகிங், மே 21

இதற்கிடையே மலேஸிய கலவரங்களுக்கு பிரதமர் துங்குதான் பொறுப்பு என சீனு குற்றம்சாட்டியுள்ளது.

# சந்திரனுக்கு வெகுசமீபமாக இன்று செல்கிறார்கள்

## 'அப்போலோ-10' வீரர்கள் அணுகும் முக்கிய கட்டம்

கேப்கென்னடி, மே 21

சந்திரனைநோக்கி சென்றுகொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் நாளை முக்கிய கட்டத்தை அடைவார்கள். சந்திரமண்டல பிரயாண கமாண்டர் கோர்ணல் ஸ்டாபோர்ட்டும் (38 வயது) கமாண்டர் சேர்மானும் (35 வயது)'அப்போலோ—10'தாய்க் கப்பலிலிருந்து அதனுடன் இணைந்துள்ள சிறு சந்திர மண்டல கலத்தில் சந்திர மண்டலத்தின் மேல்பரப்புக்கு 50,000 அடி வரை நெருங்கிப் பறக்கும்நாள் நாளைதான். இந்த முக்கியமான பயணத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே கமாண்டர் யூஷின் ஷெர்மான் தரைநிலையஅதிகாரிகளுக்கு நாளைய சந்திரமண்டல பயணம்பற்றி விரிவாக எடுத்துக் கூறிவருகிறார்,

### வர்ணப்படங்கள்

'அப்போலோ—10' விண்வெளிக்கலத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் மூன்று விண்வெளி வீரர்கள் இப்போது விண்வெளிக்கலத்தின் வேகத்தை அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள். நாளைய முக்கிய கட்டத்துக்குத் தயாராகிக்கொண்டே பூமியைப்பற்றிய பல புதிய தகவல்களை அறியக்கூடிய வர்ண டெலிவிஷன் படங்களைப் பிடித்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

நாளை சந்திரனுக்கு50,000 அடி தூரத்துக்குச்செல்லும் விண்வெளிவீரர்கள் இரண்டை பற்றிய புதிய தகவல்களையும் மனிதன் இறங்குவதற்கான சரியான இடத்தையும் தேர்ந்தெடுப்பார்கள்.

ஜூலை 20-ந் திகதி சந்திரனில் இறங்கவிடுக்கும் 'அப்போலோ'—11 என்ற அமெரிக்க விண்வெளிக்கலத்துக்கு இதுபலவகையில் உதவும்.

## ஆயிரக்கணக்கான மக்கள்

# ஆந்திர பிரதேசத்தில் அவதி

## நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தால் சேதம்

விஜயவாடா, மே 21

ஆந்திரபிரதேசத்தில் கடந்த சில தினங்களாக வீசிவரும் புயலும் பெருமழையும் இங்கு பலத்த சேதத்தை உண்டுபண்ணியுள்ளது. கரையோரத்தில் அதிக அளவு சேதம் ஏற்பட்டுள்ளது. தாழ்வான சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் சேதமாகி பலர் வீடிழந்துள்ளனர். வீடிழந்த 6000 மக்கள் நகரசபைக் கட்டிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

வீடிழந்து நிர்க்கதியாக்கப்பட்டுள்ள பலர் உணவின்மையால் வாடுகின்றார்கள். இவர்களுக்கு விமானப் படையினரின் விமானங்கள் மூலம் உணவுப்பொட்டலங்கள் விநியோகித்து வருகின்றன.

ரயில் மற்றும் போக்குவரத்து சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் நிலைமை மோசமாகியுள்ளது. சில இடங்களில் ரயில்வே பாதைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. உப்புகுண்டூர் என்ற இடத்தில் ஒரு பாலம் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டது.

இதுவரை 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்காக பத்திரமானஇடத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

### ஆசாமிலும்

புதுடில்லி, மே 21

ஆசாமிலும் இப்போது பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. பிரமபுத்திரா நதி நீர்மட்டம் உயர்ந்து அபாய நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது. ஆசாமில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தினால் தெற்கை இணைக்கும் பெரிய வீதிகள் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன.

# 'பிரிட்டனுடன் பேச்சு வார்த்தை முறிந்து விட்டது'

கோல்ஸ்பரி, மே 21

பிரிட்டனுடனை பேச்சு வார்த்தை முறிந்து விட்டதாக ரொடீஷியா சட்ட விரோத அரசாங்க தலைவர் திரு. அயன் சிமித் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ரோடீஷியாவில் விரைவில் குடியரசு அமைப்பு அரசாங்கம் அமைக்கப்படுமெனத் தெரிவித்த அவர் இது பற்றிய வெள்ளையறிக்கை அடுத்த மாதம் 20-ம் திகதி மக்களின் வாக்கெடுப்புக்கு விடப்படும் என எடுத்துக் கூறினார்.

## 'எல்லாம் செய்தாகி விட்டது'

லண்டன், மே 21

திரு. சிமித்தின் இவ்வித கருத்து பற்றி பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் அபிப்பிராயம் வெளியிடுகையில் ரொடீஷிய விவகாரத்தில் சுமுகமான முடிவு ஏற்படுத்த தம்மாலான எல்லாம் செய்தாகி விட்டது எனத் தெரிவித்து திரு. சிமித்தின் இவ்வித போக்குக்கு பலத்த கண்டனம் தெரிவித்தார். அரசாங்க கட்சியைச் சேர்ந்த 80 சதவீதமான மாணவர்களும் திரு. சிமித்தின் கருத்துக்கு

# சிரமதானிகளுக்கு 37 கப்பலில் உணவு

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டித் தொகுதியில் 27 வீதிகளைச் செப்பனிடுமாறு உபசபாநாயகரும் இப்பகுதி எம்.பியுமான திரு மு. சிவசிதம்பரம் அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பித்திருந்தார். வெகுவிரைவில் சிரமதான மூலம் இவ்வீதிகள் செப்பனிடும் வேலைகள் ஆரம்பமாகும். அரசாங்கத்திடம் இவ்வீதிகளை திருத்தப் போதிய பணமில்லாமையாலேயே சிரமதான மூலம் வீதிதிருத்த வேலைகள் நடைபெறத்திட்டமிடப்பட்டது.

சிரமதானத்தில் ஈடுபடுவோருக்குத் தேவையான உணவுப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து 37 கப்பல்களில் வந்துள்ளன.

மேற்கண்டவாறுகுடிசைக் கைத்தொழில் கிராமஅபிவிருத்தி அதிபர்திரு. வி. கே. சுப்பிரமணியம் இமையாணனில் அரசினர் கட்டிடக்கலை பயிற்சி நிலையக் திறப்பு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

# நடுச்சாமம் கைதானவர்

யாழ்ப்பாணம், புதன்

நடுச்சாமத்தின் போது வீதியில் வைத்துச் சந்தேக நடமாட்டத்தில் கைதுசெய்யப்பட்ட தெய்வேந்திரம், மாஜிஸ்டிரேட் விசாரணை பின்னா குற்ற வாளியாகக் காணப்பட்டார்.

இதற்கான தீர்ப்பு வழங்குவதை அடுத்த மாதம் 2ம் திகதிக்கு ஒத்தி வைத்தயாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் மொகமட்ஜமீல் அதுவரை சந்தேக நபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தர விட்டார்.

சந்தேக நபர் ஏற்கனவே 12 தடவைகள் சிறை சென்றவர் என பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப் பட்டது. (கா. நி)

# தி. மு. க.வை தடைசெய்யவும்

## கி.ச கோரிக்கை

பத்தேகம, புதன்

ஹினிதும கிராம சபை மாதாந்தக் கூட்டத்தில் இலங்கையில் தி.மு.க இயக்கத்தை தடைசெய்யவேண்டுமென அரசாங்கத்தை கோரும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

இத் தீர்மானத்தை தக் கொண்டுவந்த இச்சபையின்

# "எத்தொழிலையும் செய்ய முன்வரவேண்டும்"

— உபசபாநாயகர்

இமையாணன், புதன்

'தொழில் ரீதியில் மனிதர்கள் மனிதர்களைத் தாழ்த்தினுல் நாடு முன்னேறமாட்டாது. பரம்பரை பரம்பரையாகச் செய்த தொழில் என்று கூறி, சிலதொழில்களைச் செய்ய இக்காலத்தவர்கள் முன்வருவதில்லை. இந்த நிலை மாறவேண்டும்' என உடுப்பிட்டி எம்.பி.யும், உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் இமையாணனில் நடைபெற்ற ஒரு விழாவின்போது கூறினுர்.

திரு. சிவசிதம்பரமும், தொழில் உதவிக் கமிஷனரான திரு. ஜி டி ராஜாவும் இமையாணனில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டதையடுத்து திரு.சிவசிதம்பரம், அரசினர் கட்டிட (மேசன்) தொழிற்பயிற்சி நிலையமொன்றை குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார். இதையடுத்து உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் அதிபரான திரு எஸ் எஸ். செல்லத்துரைதலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அவர் பேசும்போது மேலும் கூறியதாவது:-

'மேல் நாடுகளில் மனிதர்கள் எத்தொழில்களைச்செய்தாலும் தொழில்மூலம் ஒருவரையொருவர் பிரித்து வைப்பதில்லை.

மேசன் தொழில் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ முடியும் தொழிலல்ல. எந்தக்காலத்திலும் மேசனுக்கு வேலை இல்லாமல் போகாது. தற்போதையநிலையில் மேசன் தொழிலாளர்கள் கிடைப்பதுமிகவும் கஷ்டமாகஇருக்கிறது. இப்பயிற்சிநிலையத்தில் பயிற்சிபெற்று வெளியேறுபவர்கள்தமக்கெனஒரு சங்கத்தை உருவாக்கினுல், அரசாங்கத்தின்கீழ் நடக்கும் சகல கட்டிட வேலைகளையும் இவர்களுக்கேகொடுக்க ஒழுங்கு செய்யலாம்.'

அடுத்து ஆசிரியர் க. மாணிக்கம் பேசும்போது, இமையாணனில் பரம்பரை பரம்பரையாகத் திறம்படைத்த பல தொழிலாளர்கள் இருப்பதாகக் கூறினுர். மேசன் பயிற்சிப் போதனுசிரியர் திரு. பெர்னுண்டோவும்பேசினுர்.

கரிக்கட்டு மூலை

# கிராம சபைகளுக்கு போட்டியிடுவோர் விபரம்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த கரிக்கட்டு மூலை மேற்கு கிராம சபைப் பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் வவுனியா உதவி தேர்தல் உத்தியோகத்தர் திரு. பத்மநாதனிடம் சமர்ப்பிக்கப் பட்டன. அபேட்சகர் விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்-திரு. ஏ. சின்னப்பு (தற்போதய தலைவர், திரு. எஸ். இராசையா.

2-ம் வட்டாரம்- திரு. வி. கதிரவேலு, திரு. சி. நமசிவாயம்.

3-ம் வட்டாரம் திரு. யே. சிங்கராசா (போட்டியில்லை)

4-ம்வட்டாரம்- திரு. ஏ. யோசேப், திரு. எல். செபஸ்தியாம்பிள்ளை.

5-ம் வட்டாரம்-திரு. ந. குமாரசுவாமி (போட்டியில்லை).

6-ம் வட்டாரம்-திரு. வே. கதிரித்தம்பி, திரு, எஸ் சின்னத்தம்பி.

7-ம் வட்டாரம்- திரு. எஸ். கந்தையா, திரு. என். தாமோதரம்பிள்ளை. ... விஞசித்தம்பி (போட்டியில்லை).

## கரிக்கட்டு மூலை தெற்கு

கரிக்கட்டு மூலை தெற்கு கிராமசபை தேர்தலுக்கான நியமனபத்திரங்களும் தாக்கலாயின உதவித் தேர்தல் உத்தியோகஸ்தர் திரு. பத்மநாதன் இவற்றை ஏற்றுக் கொண்டார். 5 வட்டாரங்களைக் கொண்டு புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இக் கிராம சபைத் தேர்தலில் போட்டியிடுவோர் விபரம் வருமாறு:-

1 ம் வட்டாரம்-திரு. சு. மயில்வாகனம் திரு. தா. துரைச்சாமி.

2-ம் வட்டாரம்-திரு. கே. மயில்வாகனம், திரு. எஸ். சோமசுந்தரம்.

3-ம் வட்டாரம்-திரு. சி. சின்னத்துரை (போட்டியில்லை)

4-ம் வட்டாரம்- திரு. எஸ். சிவபாதசுந்தரம், திரு. கே. சதாசிவம்.

5-ம் வட்டாரம்-திரு. இ. சிதம்பரப்பிள்ளை, திரு. ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கலத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் மூன்று விண்வெளி வீரர்கள் இப்போது விண்வெளிக்கலத்தின் வேகத்தை அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள். நாளைய முக்கிய கட்டத் ... புதிய தகவல்களை அறியக்கூடிய வர்ண டெலிவிஷன் படங்களைப் பிடித்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

நாளை சந்திரனுக்கு 50,000 அடி தூரத்துக்குச் செல்லும் விண்வெளிவீரர்கள் இரண்டரை நாட்களுக்கு சந்திர ... யும் தேர்ந்தெடுப்பார்கள்.

ஜூலை 20-ந் திகதி சந்திரனில் இறங்கவிருக்கும் 'அப்போலோ'—11 என்ற அமெரிக்க விண்வெளிக்கலத்துக்கு இது பலவகையில் உதவும்.

... அமைக்கப்படுமெனத் தெரிவித்த அவர் இது பற்றிய வெள்ளையறிக்கை அடுத்த மாதம் 20-ம் திகதி மக்களின் வாக்கெடுப்புக்கு வி... படும் என எடுத்துக் கூறினார்.

ரொடீஷிய விஷயத்தில் பிரிட்டன் அக்கறை காட்டவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

... சிமித்தின் இவ்வித ... குக்கு பலத்த கண்டனம் தெரிவித்தார். அரசாங்க கட்சியைச் சேர்ந்த 80 சதவீதமான மா... ளும் திரு. சிமித்தின் கரு...துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

... கத்தை தடைசெய்யவேண்டுமென அரசாங்கத்தை கோரும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்தைக் கொண்டுவந்த இச்சபையின் அங்கத்தவர் பேசுகையில் இந்தத் தி.மு.க. இயக்கம் நாட்டுக்கு ஆபத்தைக் கொண்டுவந்துள்ளதென்றும் சிங்களவர்களுக் கெதிராகப்பல நடவடிக்கைகளில் இவ்வியககம் இறங்கியுள்ளதென்றும் எனவே அரசாங்கம் இதைத் தடைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளாவிடில் சிங்களமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்,

இத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய திரு. ரி. விஜேநாயகா திமுக இயக்கம், நாம் தமிழர் இயக்கம் ஆகிய இரண்டையும் அரசாங்கம் உடனடியாக தடைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

... யில்லை).

6-ம் வட்டாரம்-திரு. வே. கதிரித்தம்பி, திரு, எஸ் சின்னத்தம்பி.

7-ம் வட்டாரம்- திரு. எஸ். கந்தையா, திரு. என். தாமோதரம்பிள்ளை.

8-ம் வட்டாரம் திரு. க.

சின்னத்துரை (போட்டியில்லை)

4-ம் வட்டாரம்- திரு. எஸ். சிவபாதசுந்தரம், திரு. கே. சதாசிவம்.

5-ம் வட்டாரம்-திரு. இ. சிதம்பரப்பிள்ளை, திரு. ஏ. விஞசித்தம்பி.

---

## 'ஈழநாடு'

## 10-வது ஆண்டு நிறைவுவிழா

### கட்டுரைப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிரகாரம் ஒரு கட்டுரைப்போட்டி நடைபெறும்.

**3 பிரிவுகள்** சிரேஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு

மத்தியபிரிவு 1-6-69ல் 14 19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு

கனிஷ்டபிரிவு 1-6-69-ல் 14வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு

கட்டுரைக்கான விடயங்கள்:

1. **காலத்தின் கண்ணாடி**
2. **காந்தியும் பத்திரிகையும்**
3. **தேசிய ஒற்றுமை**

கட்டுரைகள் கோடிட்ட சாதாரண பரீட்சைக்குரிய விடைத்தாளில் ஒருபக்கத்தில் மாத்திரம் சிரேஷ்டபிபிரிவு 1500 சொற்களுக்கு மேற்படாமலும், மத்தியபிரிவு 1000 சொற்களுக்கு மேற்படாமலும், கனிஷ்டபிரிவு 700 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி, 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 20-5-69-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **10-வது ஆண்டு நிறைவு விழா கட்டுரைப் போட்டி** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனுப்பப்படும் ஒவ்வொரு கட்டுரையுடனும் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள கூப்பன் ஒவ்வொன்று சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

மத்திய, கனிஷ்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் கட்டுரைகளைத் தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் அனுப்புதல்வேண்டும்.

இக் கட்டுரை சம்பந்தமான பரிசு முதலிய விபரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**'ஈழநாடு'**

**கட்டுரைப் போட்டி**

**கட்டுரை தலைப்பு:** ..............................

பெயர் : ..............................

விலாசம் : ..............................

பிரிவு: ..............................

---

## 'சோதிடத்தில் நம்பிக்கையில்லை'

### —இந்திரா

புதுடில்லி, மே 21

சோதிடத்தில் தமக்கு நம்பிக்கை கிடையாது என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

ஜனதிபதி தேர்தல் பற்றி ஒரு சோதிடர் ஜோசியம் கூறியுள்ளது பற்றி அபிப்பிராயம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்திரா காந்தி ஜனதிபதியாவார் என்றும் உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பிரதமராவார் என்றும் அந்தச் சோதிடர் கூறியிருந்தார்.

## இருளில் கரணவாய்

உடுப்பிட்டி, புதன்

பகல் முழுவதும் எரியும் மின்சாரம் இரவில் மட்டும் நிறுத்தப்பட்டு வருவதினல் கரணவாய்ப் பகுதி மக்கள் பெரும் கஷ்டமடைந்துள்ளனர்.

பகலில் இப்பகுதிகளில் தங்குதடையின்றி மின்சார விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. ஆனல் மாலை 6-30 மணியிலிருந்து இரவு 10 மணிவரை மின்சாரம் தடைப்பட்டு விடுகின்றது. கடந்த ஐந்து தினங்களாக இந்நிலை தொடர்ந்து நிலவி வருவதால் கரணவாய் இருளில் மூழ்கியுள்ளது.

இதனல் மின்சார பாவனையாளர்கள் அதிருப்தியும், கவலையும் அடைந்துள்ளனர்.

## வெடிமருந்தைக் கரைத்துக் குடித்தாராம்

யாழ்ப்பாணம், வியாழன்

திருமணத் தகராறு காரணமாக மமுடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டு சுதுமலை வடக்கைச் சேர்ந்த பொன்னையா தங்கராணி என்ற 18 வயது யுவதிவெடி மருந்தைக் கரைத்துக் குடித்த நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(கா. நி)

## "அரசாங்கப் பாடசாலைகளில் சேரமுடியாதா?"

வெள்ளவத்தை, புதன்

'தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் கல்வி வசதிக்காகவே முக்கியமாக அரசாங்கம் சகல தனியார்துறைப் பாடசாலைகளையும் கையேற்றுள்ளது. இப்போது வட பகுதியிலுள்ள தமிழ்ப்பிள்ளைகள் சாதிப் பாகுபாடின்றி அரசினர் மத்தியமகா வித்தியாலயங்களில் கல்வி பயில முடியும். இதற்காக பௌத்த பாடசாலைகளைத்தான் இவர்கள் ஸ்தாபிக்கவேண்டும் என்றில்லை. உதாரணமாக இன்று கரவெட்டி கல்லோடை என்று அழைக்கப்பட்ட இடத்துப் பௌத்த பாடசாலையும் அல்வாய் பௌத்த பாடசாலையும் அவசியமேயில்லை. ஏனெனில் அருகில் பெரிய நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம், திரு. இருதயக் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி என்பன இருக்கின்றன. ஏன் இந்தப் பிள்ளைகள் அவற்றில் சென்று படிக்க முடியாது?'

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த சில தமிழ்ப் பிரமுகர்கள் வெள்ளவத்தையில் கூடிய கூட்டமொன்றில் திரு. எஸ். கந்தசாமி பேசுகையில் கூறினர்.

அரசியல்வாதிகள் இந்தப் பௌத்த பாடசாலைகளின் பிரச்னையை ஒரு சிக்கலான பிரச்னையாக்கி அதன் மூலம் எதிர்வரும் தேர்தலில் அரசியல் இலாபம் சம்பாதிக்க அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சாதிப் பிரச்னை தீர்ந்த பிறகு பெரியதோர் சமயப் பிரச்னை தோன்றுவதற்கு வித்திடப்படுகிறதென்றும் அவர் சொன்னர்.

திருவாளர்கள் சுந்த. கதிர்காமநாதன், வே. கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

## 'அதிகார ஆசை அற்றவர் டட்லிக்கு முகம்மதலி புகழ்மாலை

மூதூர், புதன்

'பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அதிகாரத்துக்கு ஆசைப்பட்டவரல்ல. விவசாய, பொருளாதாரத் துறையில் நாட்டை முன்னேற்றுவதே அவரது குறிக்கோளாகும்.'

முஸ்லிம் பொத்தனையில் ஐக்கிய தேசியக்கட்சியின் கிளையொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய மூதூர் முதலாவது ஆட்சிமன்ற அங்கத்தவர் ஜனப் எம். ஈ. எச். முகம்மதலி மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருந்தபோதும் ஐக்கியதேசியக் கட்சி ஒன்றே பலம் வாய்ந்ததாகவுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் அக்கட்சியின் கிளைகள் நிறுவப்படுதல் அவசியம். அப்பொழுதுதான் மக்களுக்கு அரசியல் நிலைமைகளை எடுத்து விளக்கலாம். அதே நேரத்தில் தவறன கருத்துக்களை மக்களுக்குப் பிரசாரம் செய்யும் சில சுயநலவாதிகளின் நடவடிக்கைகளையும் தடுக்க இக்கிளைகள் உதவியளிக்கும். நாட்டில் இனக்கலவரம் ஏற்படாது ஒற்றுமையை நிலைநாட்டுவதே ஐக்கிய தேசியக்கட்சியின் நோக்கமாகும்.

முன்னர் ஐக்கியதேசியக் கட்சியைக் குறைக் கூறிக்கொண்டு திரிந்தவர்கள்கூட இப்பொழுது இக்கட்சியைப் புகழ்கிருர்கள். ஆதலால் திரும்பவும் இந்தக் கட்சி வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வரும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. ஆகவே தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு ஒரேயொரு வழி ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிப்பதேயாகும்.

மேற்கு தம்பலகாமம் பகுதியிலும் ஒரு கிளையை ஜனப் முகமதலி அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

## ஆலயப் பிரவேசத்துக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலில் சிறுபான்மைச் சமூகத்தவரை ஆலயப் பிரவேசம் செய்யவிடுமாறு கோரி மேற்படி கோவில் பரிபாலன சபையினருக்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(கா. நி)

## பலிநிறுத்தப் பட்டது

யாழ்ப்பாணம், புதன்

நூறு வருடங்களுக்கு மேலாக சுன்னகம் அண்ணமகேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றுவந்த மிருகபலியீடு வைபவம் இவ்வருடத்திலிருந்து நிற்பாட்டப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது, மேற்படி ஆலயத்தின் பொங்கல் விழா எதிர் வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

## உற்சவம்

அராலி, புதன்

அராலி வடக்கு முருகமூர்த்தி ஆலய வருட விழா இன்று புதன் கிழமை கொடியேற்ற விழாவுடனரம்பமாகி பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் 29ம் திகதி இரதோற்சவமும் 30ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## 'ஈழநாடு'

## 10-வது ஆண்டு நிறைவு விழா

## மாணவர் பேச்சுப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிரகாரம் ஒரு பேச்சுப்போட்டி நடைபெறும்.

**3 பிரிவுகள்:**

சிரேஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு.

மத்திய பிரிவு 1-6-69-ல் 16 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு.

கனிஷ்ட பிரிவு 1-6-69-ல் 12 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு.

### பேச்சுக்கான விடயங்கள்:

**சிரேஷ்ட பிரிவு**

1. மக்களும் பத்திரிகைகளும். 2. தேசிய ஒற்றுமை. 3. விஞ்ஞானக்கல்வி. 4 வண. ஞானப்பிரகாசர். 5. 'ஈழநாடு' பத்திரிகை. 6. இஸ்லாமும் தமிழும். 7. கூட்டுறவும் பொருளாதார நலனும்.

**மத்திய பிரிவு**

1. உணவுஉற்பத்தி. 2. பத்திரிகையும்வாழ்க்கையும். 3. சுவாமி விபுலானந்தர். 4. 'ஈழநாடு' பத்திரிகை. 5. உமறுப் புலவர். 6. இலங்கையின் கைத்தொழில் விருத்தி.

**கனிஷ்ட பிரிவு**

1. காந்திமகான். 2. ஆறுமுக நாவலர். 3. 'ஈழநாடு' பத்திரிகை. 4. உடற்பயிற்சி. 5. எமது நாடு. 6. நபிகள் நாயகம்.

ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள்மட்டும் அனுமதிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 'ஈழநாடு' மாணவர் பேச்சுப்போட்டிக் கூப்பனில் நிரப்பப்பட்டு, தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 25-5-69-ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **10-வது ஆண்டு நிறைவு விழா பேச்சுப் போட்டி** என்று குறிப்பிடுதல் வேண்டும்

இப்பேச்சுப்போட்டி சம்பந்தமான பரிசு முதலிய விபரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா**

**மாணவர் பேச்சுப் போட்டி**

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

பிரிவு: ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தெய்வ நம்பிக்கையும் பிரார்த்தனையும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட செயல்களாகும். —மகாத்மா காந்தி

# ஈழநாடு

..naadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389

பாலை, சௌமியவருஷ வைகாசி மாதம் 9-ந் திகதி (22-5-69)

## யாழ். கனிஷ்ட தொழில்நுட்ப நிலையம்

பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை இன்று கொண்டாடும் யாழ். கனிஷ்ட தொழில் நுட்ப நிலையம் மேலும் மேலும் சிறப்புற வளர்ந்து பூரண வசதியுள்ள தொழில் நுட்பக்கல்லூரியாகி வெள்ளி விழா, பொன் விழா போன்ற பல விழாக்களையும் கொண்டாட வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

தமிழ்மொழி மூலம் கல்வி கற்ற மாணவர்களுக்குத் தமிழ் மொழியில் தொழில் நுட்பக் கல்வியளிக்கும் ஒரேயொரு நிலையம் இலங்கையில் இதுதான். கொழும்புத் திட்டத்தின் கீழ் நியூஸிலாந்து மக்களினதும் அரசாங்கத்தினதும் உதவியுடன் அமைக்கப்பட்டது. நாற்பது மாணவர்களுடன் வணிக வகுப்புடன் ஆரம்பமான இந்நிலையம் இன்று தொழில், வணிகம், பொறியியல் மூன்று பிரிவுகளிலும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட தொழில்களில் போதனையளிக்கப்படுகிறது. ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் தொழில் நுட்பக் கல்விபெறுகின்றனர். முப்பது முழுநேரப் போதனாசிரியர்களும் 40 பகுதிநேர விரிவுரையாளர்களும் பணியாற்றுகின்றனர். நிலையம் விஸ்தரிக்கப்பட்டுவருகின்றது. புதிய கட்டடங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன.

நமது நாட்டிற்கு இன்று மிக மிக அத்தியாவசியமாகத்தேவைப்படுவது தொழில் நுட்பக் கல்விதான். இந்தத் தேவையுடன் ஒப்பிடும்போது 10 ஆண்டுகளில் யாழ். கனிஷ்ட தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் அடைந்துள்ள வளர்ச்சிபோதாதென்றே சொல்ல வேண்டும். இந்நிலையத்தின் மாணவர்களும் ஆசிரியர்களும் எடுக்கும் அக்கறையுடன் கல்வி அமைச்சும் அரசாங்கமும் ஆர்வமும் அக்கறையும் செலுத்திவந்திருந்தால் இன்று இந்நிலையம் நாடு முழுவதிலுமுள்ள தமிழ் ஆங்கில மொழி மூலம் கல்வி போதனை பெற்றவர்களுக்கும் வெளிநாடுகளிலுள்ள தமிழர்களுக்கும் கூட தமிழில் தொழில் நுட்ப போதனை அளிக்கக்கூடிய நிலையை அடைந்திருக்கும். கொழும்புத்திட்ட உதவியின் கீழ் அமைக்கப்பட்ட இந்நிலையத்தை அத் திட்டத்தின் கீழ் உதவிபெற்றே விஸ்தரித்து பூரண வசதியுள்ள தொழில்நுட்பக்கழகமாக்கியிருக்கலாம்.

பத்தாண்டு விழாக்கொண்டாடும் இச் சமயத்தில், கனிஷ்டதொழில் நுட்ப நிலையத்தை பூரண வசதியுள்ள தொழில்நுட்பக் கழகமாக்குவதற்கும், உயர்தர தொழில் நுட்ப பட்டதாரிகளையும் நிபுணர்களையும் உருவாக்குவதற்குமான தொழில்நுட்பக் கல்வி, பயிற்சி அளிக்க உரிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கமும் கல்வி அமைச்சும் உறுதிபூணவேண்டும். இந்நிலையம் யாழ்ப்பாணத்திலிருந்தாலும் நாடு முழுவதற்கும் பயன் தரக்கூடியதென்பதை நினைவில் கொள்வது அவசியம்.

## சேக்கிழார் விழா

இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் சேக்கிழார் விழா நடைபெறுகிறது. 'பக்திச்சுவை சொட்டச் சொட்டப்பாடிய சேக்கிழாரின் அருமைபெருமைகளை அறிஞர் வாயிலாகக் கேட்டு தமிழின் இனிமையையும் சைவத்தின் பெருமையையும் அறிந்து, உணர்ந்து தெளிந்து

ஜாதித்திமிரும் செருக்கும் நிறைந்தவராக ஒரு கட்டத்தில் காட்சி தரும் சுந்தரமூர்த்தி நாயனார், பின்னர் தில்லைவாழ் அந்தணர்க்கும் திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்' என்று திமிர், செருக்குப் பெருமை எல்லாவற்றையும் நீக்கிய அடியார்க்கு

# சமயமறிந்து சைவத்துக்கு உதவியவர் சேக்கிழார்

**சைவஉலகிற்குப் பெரியபுராணம் தந்த சேக்கிழார் பெருமானது விழா இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது. இவ்விழாவினையொட்டி இச்சிறப்பிதழ் வெளியிடப்படுகிறது.**

பண்டிதர் கி. பொன்னம்பலவாணர்

செயற்கரிய செய்தவர் என்று பெருமை பெற்றவர் இவ்வுலகிற் சிலரேயாவர். அவர்கள் ஒவ்வொருவரும் தாந்தாம் எடுத்துக்கொண்ட செயல்களில் காட்டியுள்ள திறமை முழுவதும், பிறரால் உணர முடியாமலிருக்கும் அதே சமயத்தில் அவர்கள் செயல்களனைத்தும் அவற்றை உணராதவர்கட்கும் அவசியமானவையாய் இருக்கும். இவ்வாற்றான செயற்கரிய செயல்களைச்செய்த பெருமக்களுள் முதன்மையானவரென்று நாம் சேக்கிழார் பெருமையைக் கொண்டாடுவது எமக்குப் பெருஞ் சிறப்பினை நன்கு நல்கும்.

செந்தமிழ்நூல் விடுத்தவனென்று அருணகிரிப் பெருமானார் போற்றப்படுவதற்கு முருகப்பெருமான் சங்கப் புலவராய் இருந்தமையினையும் களவியலுரை கண்டமையினையும் சிறப்பாகக் கருதலாம். அப்படியான தமிழ்க் கடவுளுக்கும் தமிழன்னைக்கும் நடைபெற்ற உரையாடலின் போது 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே' என்றது தமிழன்னை கூற்றாகும். ஒருவெண்பாவில்நாற்பொருளும் மொழிந்த அன்னை அரியது என்ற காரியத்தைத் திறம்படவும் குறையுமின்றிச் செவ்வனே செய்தருளியவர் சேக்கிழார் பெருமானுவர்.

சில்வாழ்நாளும், பல்பிணியும், சிற்றறிவும் வாய்ந்த மனிதர் இகபர நன்மைகளைச் சந்தேகமின்றி யனுபவிக்கவேண்டுமென்ற தம் மெண்ணம் நிறைவேற வேண்டுமென்று சேக்கிழார் பெரிய புராணத்தைத் தில்லையம்பலவனின் கருணையினுல் பாடியருளினர். அது அநபாயச் சோழனுக்கு 'பொய் நூலிது மறுமைக்காக திம்மைக்குமற்றே வளமருவுகின்ற சிவகதை இம்மைக்கு மறுமைக்கு முறுதி' என்று கூறியதாகவரும் சேக்கிழார் புராணப் பகுதியினின்று நன்கு தெளியப்படும்.

அநபாயச் சோழன் சீவகசிந்தாமணிக்கதையை மெய்யென்று வரிசைகூர உளமகிழ்ந்து பலபடப்பாராட்டிக்கேட்டான். அவனது அப்போக்கானது சேக்கிழார் பெருமானின் தலையீடு இல்லாதுவிடின் அவன் சமண

யனைத்துமுடைய தில்லைவாழந்தணர்களால் முடிசூட்டப்படும் சோழமன்னன் ஒருவன் சைவமாஞ் சமயத்தைவிட்டுப் பிறமதத்திற்கு மாறியிருந்தால் சைவத்திற்கு ஏற்படும் அந்த நிலையைக் கற்பனை பண்ணுவதும் சைவன் ஒருவனுக்கு அவமானமாகும். ஆகையினுற்றான் சீவகசிந்தாமணியில் ஈடுபடாதவாறு சேக்கிழார் அநபாயனுக்குக் காலமறிந்து பெரிய புராணத்தைப் பாடியருளினர். இச்செய்கை சைவத்திற்குக் காலத்தினுற் செய்த உதவியாகும்.

சேக்கிழார் போன்று சைவத்திற்குக் காலமறிந்து உதவிசெய்த இன்னுமொருவரான நாவலர்பெருமான் பெரியபுராணத்தைப் பற்றிக் கூறுவதிலிருந்தும் சேக்கிழார் பணியினை ஏன் தமிழன்னை அரிது என்று கூறினரென்று உணரலாம்.

"இப்பெரிய புராணமானது தன்னை உணர்ந்தவற்கன்றி மற்றவர்கட்குத்தமிழ் வேதமாகத் தேவாரத்தின் வரலாறும், மகிமையும் ஒரோ விடங்களில் அதன் பொருளும்விளங்குதல்கூடாமையானும்...... அன்பு நிகழாமையானும் சைவர்கள் யாவரும் ஒருதலையாகக் கற்றுணரவேண்டும் நூலாம்" என்பது பெரியபுராண உபோற்காதத்தின்கண் நாவலர் கூறியருளிய வாக்கு.

இதுகாறும் கூறியவாற்றுல் சேக்கிழார் செயற்கரிய காரியம் செய்தார் என்பதும் அவர் செயல் மனிதர்களுக்கு இன்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் தரத்தக்கதேயன்றிச் சைவ சமயத்திற்கே காலத்தினுற் செய்த உதவியென்பதும், நாமெல்லாம் அவரியற்றிய புராணத்தை ஒரு தலையாகக் கற்றுணரவேண்டுமென்பதும் பெறப்படுகின்றது. சேக்கிழார் புராணம் பற்றியும் அவரியற்றிய பெருநூல் பற்றியும் சிந்திப்பதற்கு வாய்த்தமை நமக்கு ஈதோர் பிறவிப்பயனேயாகும்.

# துணையடி தலைமேற் கொள்வோம்

**—பண்டித வித்துவான் க. கி நடராஜன்—**

**(ஆசிரிய விருத்தம்)**

1 கல்லையும் உருக்கும் பெற்றி கவினுறப பாடல் செய்து
கசிந்துநின் றுருகும் மேலாம் காதல்சேர் நாயன் மாரின்
நல்லஅன் பளந்து காட்டி நானிலத் திவர்கள் மாண்பு
நலமுறத் தெரிக்க வேறு நற்றமிழ்ப் புலவர் உண்டோ?
இல்லையே என்ன யாருங் எடுத்தெடுத் தியம்ப யாத்த
இனியநல் லடியார் தங்கள் எழில்வர லாறு கூறும்
சொல்லரும் பெருமை வாய்ந்த தொண்டர்தம் புராணந் தந்த
தூயஎம் சேகிழார்தம் துணையடி தலைமேற் கொள்வாம்.

2 பத்தியின் பெருக்கும் எங்கள் பரமனார் சமய மாகும்
பழமைசால் சைவத் தின்றன் பண்புகள் ஒருங்குவாய்ந்த
சித்தியின் தருக்கும் பண்டைச் செந்தமிழ்ச் சிறப்புஞ் சேரத்
திருமுறை யாக வோங்குந் திருவளர் பெருமை வாய்ந்து
எத்திசை யோரும் போற்றும் எழிலணி மெய்ப்பாட் டோடு
இனியசொல் வளமுங் வாய்ப்ப இன்னுயிர்க் கின்பம் நல்கும்
பத்தியின் மிளிருந் தெய்வப் பாடலால் [illegible]ரிய காவ்யம்
பகர்ந்தருள் சேக்கி ழாரைப் பரவுதும் [illegible]ன்பினேடே.

3 அகிலநல் லுலகத் துள்ள அடியரின் பெருமை யெல்லாம்
அகிலநல் லுலகத் துள்ள அன்பர்தம் உருக்க மெல்லாம்
அகிலநல் லுலகத் துள்ள ஆன்றநற் பண்பை யெல்லாம்
அகிலநல் லுலகத் துள்ள அனைத்துநன் [illegible]ள்ள வெல்லாம்
அகிலநல் லுலகங் காக்கும் அரன்அடி எடு[illegible] ளிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டிலும் நகரிலும்

சென்ற புதன்கிழமை வெளியான கொழும்பு ஆங்கில தினசரி 'டெயிலி நியூஸில்' ஒரு கேலிச்சித்திரம் (கார்ட்டூன்) வரைந்திருப்பதை நேயர்கள் பார்த்தீர்களோ என்னவோ! இப்பொழுதுஇருக்கும் அரசியல் நிலையில் அது ஒரு கருத்துமிக்க சித்திரம்என்றுஎனக்கு தோற்றுகிறது.

தமிழரசுக் கட்சி தலைவர் திரு. செல்வநாயகம் ஒரு கடற்கரையில் மேற்குப்பக்கம்நோக்கியவாறு கைகளைக் கட்டிக் கொண்டு வருவது வரட்டும் என்ற பாவனையில் நிற்கிறர், கிழக்கே சூரியன் உதயமாகிறது,அதன் கிரணங்களில் 'ஈழம் தமிழ் அரசு' என்ற வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. சூரியன் யார் தெரியுமா? முது வடும் அரசியல் தலைவர் வவுனியா சுந்தரலிங்கம் தான். கேலிச்சித்திரத்தின் தலைப்பு 'சூரியன் உதயம்' என்பது.

சுந்தரலிங்கத்தாரின் ஆங்கிலப் பெயரில் முதல் மூன்று எழுத்துகளும் 'சன்' என்ற சூரியனைக் குறிக்கும். அவருடைய நெருங்கிய நண்பர்கள் அவரை 'ஹலோ, சுன்' என்று வரவேற்பார்கள். ஆங்கில எழுத்துகளில்'சன்' என்பதும் 'சுன்' என்பது ஒன்றுதான்.

சுந்தரலிங்கம் என்ற சூரியன் உதயமாகின்ற தென்றும் அதை செல்வநாயகத்தார் பொருட்படுத்தாமல் நிற்கிறர் என்றும் அந்த கேலிச்சித்திரம் காண்பிக்கிறது.

இதைப்பற்றி நான் எவ்விதமான அபிப்பிராயமும் கூறத்தயாராயில்லை. யாழ்ப்பாணத்து தமிழரின் அரசியல் நிலைமையில் ஒரு முக்கியமான கட்டம் நெருங்கிவிட்டது. என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். வருகிற பொதுத் தேர்தலில் ஏந்தக்கட்சிக்கு அதிக பலம் கிடைக்கப் போகிறதென்று பலர் பலவிதமாக் ஹேஷ்யம் கூறிக்கொண்டிருக்கிறர்கள். இப்பொழுது இருக்கும் இரு பெரும் அரசியல் கட்சிகளையும் தொலைத்து விட்டு இன்னெரு புதிய கட்சியை உற்பத்தியாக்க வேண்டுமென்று சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கிறர்கள். தமிழ்மக்கள் சிந்தித்து தீர்மானிக்கவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

1965-ம் ஆண்டு தனிச்சிங்களசட்டம் வந்தநாள்முதல் சுந்தரலிங்கத்தின் சித்தாந்தம் என்னவென்று தனித்

லாமா? சிங்களவரும் தமிழரும் சோனகரும் பிறரும் 'இலங்கையர்' என்ற பெயரில் ஒற்றுமையாக வாழமுடியாதா? தமிழர் தனிராஜ்யம் அமைத்துக்கொண்டால் இனப்பூசல்கள் தீர்ந்துவிடுமா? அவர்கள் தனித்து வாழமுடியுமா?

ஏற்கனவே தமிழகத்தில் தி. மு. க. அரசாங்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிங்கள தோழர்களிடையே பெரும்பீதிஉண்டாகியிருக்கிறது. அப்படியிருக்கையில் தனித்தமிழ்அரசு உண்டாக்குவது உசிதமானதா?

இவைபோன்ற பல கேள்விகள் இலங்கைவாழ் தமிழ் மக்களுடைய மூளையைக்கிளறிக்கொண்டிருக்கின்றன. இலங்கைத் தமிழரின் அரசியல் வாழ்க்கையில் வரப்போகும் பொதுத்தேர்தல் மிகவும் முக்கியமானதோர் திருப்பமாகும். சிந்தித்து செயலாற்றும் சக்தி நமது அரசியல் தலைவர்களுக்கும் அவர்களை உண்டுபண்ணும் வாக்காளப் பெருமக்களுக்கும்இருக்கவேண்டும் அதை அவர்கள் பாரபட்சமின்றி பிரயோகிக்கவேண்டும்.

**வழிப்போக்கன்**

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன் கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராசா வாலிப மன்றத்தாரின் 3-வது ஆண்டுவிழா இன்று ஆரம்பமாகிறது. மன்றத்தலைவர் திரு. ஜெனம் பிரான்சிஸ் மன்றக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

காலை 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும், மாலை பல விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும். இதன் பின் "என்னையே தருகிறேன்" என்னும் சமூக நாடகமும் மன்றத்தாரின் மைதானத்தில் நடைபெறும். (தே. நி

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஒரு விளக்கமும், 'ஞானமிர்தம்' என்ற தத்துவநூலுக்கு விளக்க உரையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்தில்திருக்குறளுக்கு ஓர் அறிமுகமும் இவர் எழுதியுள்ளார்.

வடமொழி மத்தவிலாசப் பிரகசனத்தைத் தமிழிலே மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கும், சித்தாந்த கலாநிதியவர்கள், இதுவரை ஐம்பதுக்குமேற்பட்ட பயனுள்ள நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்

...மூரின் அருமைபெருமைகளை அறிஞர் வாயிலாகக் கேட்டு தமிழின் இனிமையையும் சைவத்தின் பெருமையையும் அறிந்து, உணர்ந்து தெளிந்துகொள்ள வாய்ப்புப்பெற்றவர்கள் கொடுத்துவைத்தவர்கள். தமிழறிஞர் ஔவை துரைசாமிப் பிள்ளை இவ்விழாவில் கலந்துகொள்வது மற்றொரு சிறப்பு.

சிவனடியார்கள் வரலாறு அனைத்தையும் ஒரு நூலாகத் திரட்டி பெரிய புராணமாக அமைத்துக் கொடுத்த சேக்கிழார், அநபாய சோழனுக்கு மட்டுமல்லாது காலம்உள்ளளவும் மக்கள் குலம் இம்மை மறுமைப் பயனைப்பெற வழிசெய்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று தோன்றியுள்ள சலசலக்கும் சூழ்நிலையில் தொண்டர் பெருமையையும் சைவத்தின் பெருமையையும் தமிழின் சிறப்பையும் உணர்த்திய சேக்கிழாருக்கு விழா எடுப்பது மிகமிகப் பொருத்தமே. 'பிராமணனுக்குப் பிராமணன் அடிமையாவதா?' என்ற ... தில்லைவாழ் அந்தணர்க்கும் திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்' என்று திமிர், செருக்குப் பெருமை எல்லாவற்றையும் நீக்கிய அடியார்க்கு அடியாராகக் காட்சிதருகிறார். இவற்றை எடுத்துக்காட்டுபவர் சேக்கிழார்.

நமது நாட்டில் அதிகாரப்போட்டி, பதவிப்பூசல், இன, மதக் குரோதம், சாதிப்பாகுபாடு போன்றவைகள் அமைதியாக வாழமுடியாத நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு மட்டுமல்ல ஒரு நாட்டை ஆளும் மன்னனும் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை வகிக்கும் முதல் அமைச்சரும் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்பதையும் வாழ்ந்து காட்டியவர் சேக்கிழார் பெருமான்.

நாட்டு மக்களும் நல்லமைச்சர்களும் சேக்கிழாரை அறிந்துஉணர்ந்து பின்பற்றி நடந்துகொள்வதற்கு இன்றும் நாளையும் நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

...யென்று வரிசைகூற உளமகிழ்ந்து பலபடப்பாராட்டிக்கேட்டான். அவனது அப்போக்கானது சேக்கிழார் பெருமானின் தலையீடு இல்லாதுவிடின் அவன் சமண சமயத்தைச் சார்தற்கு ஏதுவாயமைந்திருக்கும். அப்படியொரு நிலையேற்படின் சைவசமயத்திற்கு ஏற்படும் இழுக்கு எல்லையின்று. சைவமே இன்று இல்லையாய் இருந்திருக்கும். இருந்திருந்தாலும், பாடசாலை விஞ்ஞானக் கூடங்களில் அமிலத்திரவத்தில் வைக்கப்பட்டிருக்கும் செத்த பாம்பு போன்றே இருக்கும். ஏனெனில் சிதம்பரம் எனப்படும் திருத்தலமும், தில்லைவாழந்தணராகிய மேன்மக்களும் சைவத்தின் உயிர் நாடியாவர். சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமான் அனவரதமும் ஆனந்த நிருத்தஞ் செய்யும் அம்பலத்தையும் கோயிலையும் நிர்மாணித்தவர்கள் சோழ மன்னர்கள். தில்லை நடராசர் தில்லைவாழந்தணருட்டாமும் ஒருவரென்று சொல்லிய பெருமையுடைய தில்லைவாழந்தணர்களே சோழ மன்னர்கட்கு முடிசூட்டுவர்கள். பெருமை

பரிந்தருள் சேக்கி ழாரைப் பரவுதும் [illegible]ன்பினேடே.

3 அகிலநல் லுலகத் துள்ள அடியரின் பெருமை யெல்லாம்
அகிலநல் லுலகத் துள்ள அன்பர்தம் உருக்க மெல்லாம்
அகிலநல் லுலகத் துள்ள ஆன்றநற் பண்பை யெல்லாம்
அகிலநல் லுலகத் துள்ள அனைத்துநன் [illegible]ள்ள வெல்லாம்
அகிலநல் லுலகங் காக்கும் அரன்அடி எடு[illegible]ளிக்க
அகிலநல் லுலகம் போற்றும் அணிபெறும் நூலாத் தந்த
அகிலமும் உணர்ந்த மேலாம் அருண்மொழி சேக்கி ழார்க்கே
அகிலநல் லிலங்கை மன்றம் அன்புடன் விழாஎடுக்கும்.

4 படிப்பவர் உள்ளந் தன்னைப் பண்புடை உள்ள மாக்கிப்
பரமனுக் காளாம் அன்பர் பத்தியின் பான்மை காட்டி
நடிப்பது விடுத்த ஞான வள்ளல்கள் நலம்பா ராட்டி
நம்பனுக் கென்றும் ஆற்றும் ஞானநற் பூசை சாற்றித்
துடிப்புடன் பணிசெய் தற்குத் தூண்டிடுங் கவிதை தந்த
தூயசேக் கிழார்க்கெ டுக்குஞ் சொல்லரும் விழாவே வெல்க
இடித்துரை கூறி யாளும் இனியநட் பாளர் ஓங்க
இன்றமிழ் சைவம் ஓங்க இன்னுயி ரெல்லாம் ஓங்க.

# 'தமிழ் பாடசாலைகளாக எடுத்தால் எல்லோருக்குமே திருப்திதான்'

பௌத்த பாடசாலைகள் விவகாரம் சம்பந்தமாக திரு. எம். கே. அந்தனிசில் பின்வருமாறு எழுதுகிறார்:

தமிழ்மக்கள் தமிழ்மக்களாக வாழ்வதை அரசாங்கம் விரும்பவில்லை. அப்படியாயின் பொறுப்பேற்கவிருக்கும் மூன்று பாடசாலைகளையும் அரசாங்கம் தமிழ்ப் பாடசாலைகளாகப் பொறுப்பேற்றிருக்கும். ஆனால் இனமாற்றத்திற்கு மனமாற்றம் செய்யும் வகையில் நடந்துகொள்ளும் அரசாங்கம் இதன்மூலம் ஒரு இனக்கொலைக்கு ஆயத்தமாகிறது. அதற்கான 'கால்கோல்' விழாதான் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் வைபவமாகும்.

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படவிருக்கும் 3பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் அத்தனைபேரும் தமிழர்கள். ஆசிரியர்களும் அத்தனைபேரும் தமிழர்கள். நிலைமை இப்படியிருந்தும் இப்பாடசாலைகளை பௌத்த சிங்களப் பாடசாலைகளாகவே அரசாங்கம் பொறுப்பேற்கக் கங்கணம் கட்டி நிற்கிறது.

முதலாளித்துவம் பேசும் ஆட்சியினரும், சோஷலிசம்' பேசும் கூட்டாட்சிவாதிகளும், மததர்மம் பேசும் பௌத்த பிக்குகளும் இப்பிரச்னையில் ஒருவரையொருவர் கட்டியணைத்து ஒருமித்து ஒருருவாக நிற்கின்றனர். தமிழ்மக்கள் மீது பௌத்த மதத்தையும் சிங்களத்தையும் திணிக்க அவர்களிடையே நெருக்கமான ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது.

உண்மையான சோஷலிசம் சிறுபான்மை இனங்களின் மொழிஉரிமை முதல் பிறஉரிமை அனைத்தையுமே வற்புறுத்தியிருக்கிறது.

பௌத்த சிங்களப் பாடசாலைகள் விவகாரத்தையொட்டி தற்போது எழுந்துள்ள வாதப் பிரதிவாதங்கள் அனைத்தும் நிச்சயமாக ஆழ்ந்த சிந்தனைக்குரியவை.

சிறுபான்மைத் தமிழர்கள் முன்பு சிங்களவர்களாகவிருந்தவர்களென்றும், பின்புதான் அவர்கள் தமிழர்களாக மாற்றப்பட்டார்களென்றும் பிரபலபௌத்த பிக்குகள் கூறத் தலைப்பட்டுள்ளனர். இற்றைக்கு சில மாதங்களுக்குமுன் ஆர். ஜி. சேனநாயக்கா ஆட்சி மன்றத்தில் இக்கருத்தையே கூறியிருந்தார். இந்த புரட்சிவாதத்தை சிறுபான்மைத் தமிழ்மக்கள் ஏற்கமாட்டார்களென்பது சர்வநிச்சயம்.

## மாறுவதன்மூலம் தீருமா?

தமிழ்மக்களிடையே நிலவும் சாதி அடக்குமுறைக்கு முடிவுகாணவேண்டியது மிக அவசியம் என்பதை இச்சூழ்நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் மதம் மாறுவதன் மூலமோ, இனம் மாறுவதன் மூலமோ சாதிப் பிரச்னைக்கு முடிவு காணமுடியாது என்பதை சிறுபான்மைத் தமிழ்மக்களும் நன்கு உணர்ந்துகொள்ள முடியும்,

சாதிப்பிரச்னைக்கு முடிவு காணுவதற்காகத்தான் தமிழ்ப் பாடசாலைகளை பௌத்தசிங்களப்பாடசாலைகளாக அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது என்றால் இதை யாராலும் நம்ப முடியுமா?

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் இனமாற்றம் செய்யப்பார்க்கிறது என்பதே உண்மை. அதாவது ஆட்டுக் குட்டிக்காக ஓநாய் அழுத கதையைப்போல.

## தாய்மொழிமூலம் கல்வி

இலங்கையில் தாய்மொழி மூலம் போதனை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம். ஆனால் இச்சட்டத்தையேமீறி அரசாங்கம் தமிழ்ப்பிள்ளைகளுக்கு சிங்களம்மூலம் போதனையளிக்க விடாப்பிடியாக முன்நிற்கிறது என்றால் இச்சூட்சுமத்தை எவரேனும் எளிதில் புரிந்துகொள்ள முடியாதா:

சிங்களமக்களையோ அல்லது முஸ்லீம் மக்களையோ யாராவது இனமாற்றம் செய்யப் புறப்பட்டால் இன்று என்ன நடக்கும்? ஆனால் தமிழ்மக்களை அவர்களுக்குள் உள்ளவேண்டாத சாதி மனப்பான்மையைப் பயன்படுத்தி இனமாற்றம் செய்வது சுலபம் என்றுசிலர் கருதுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில்உள்ளூர் சுதந்திரக்கட்சி கிளைக்காரியதரிசி ஒருவர், வடக்கில் பௌத்த சிங்களப் பாடசாலைகள் ஏற்பட முடியாதென்றால் தெற்கில் எப்படி தமிழ் பாடசாலைகள் இயங்க முடியும் என்ற தொனியில் சமீபத்தில் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விட்டிருந்தார். இது மிகவும் விசனத்திற்குரியதாகும்.

## தெற்கில் தமிழ்ப் பாடசாலைகள்

ஏனெனில் தெற்கில்உள்ள தமிழ்ப் பாடசாலைகள் அங்குள்ள தமிழ பிள்ளைகளுக்கு தமிழ் போதிப்பதற்காக இயங்குகின்றனவே தவிர சிங்கள மாணவர்களுக்கு இந்து மதத்தையும் தமிழையும் திணிப்பதற்காக இயங்குபவன அல்ல. ஆனால் வடபகுதியில் பொறுப்பேற்கப்படவிருக்கும் பௌத்த சிங்களப்பாடசாலைகள் தமிழ்ச் சிறுவர்கள் மீது பௌத்த மதத்தையும். சிங்களத்தையும் திணிக்க ஏற்படுத்தப்பட்டவையாகும். இந்த உண்மையை எப்படித்தான் மூடிமறைக்க முடியும்?

## தமிழ்ப் பாடசாலைகள் என்றால் ஆட்சேபமில்லை

தற்போது அரசாங்கம் கையேற்கவிருக்கும் மூன்று பாடசாலைகளையும் தமிழ்ப் பாடசாலைகளாகக் கையேற்றால் அது எல்லோருக்குமே மிக திருப்திகரமான, சந்தோஷமான விஷயம். ஆனால் பௌத்த சிங்களப் பாடசாலைகளாக அரசாங்கம் அவைகளைக் கையேற்க முனைவதால் தான் ஆட்சேபனை கிளம்புகிறது. இது முற்றிலும் நியாயமானதே.

# சிறப்புரை நிகழ்த்தும் சித்தாந்த கலாநிதி

தமிழ், ஆங்கிலம், வடமொழி என்ற மும்மொழிகளிலும் ஆழ்ந்தபுலமையும், கடன்மடை திறந்தாற்போலச் சொற்பொழிவாற்றுந் திறனும், ஆராய்ச்சி வன்மையும் பெற்று இன்று மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராய் விளங்குபவர்தாம் சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர் முதலான பட்டங்களைப் பெற்றிருக்கும் வித்துவான் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்.

புறநானூறு, கலித்தொகை, சிந்தாமணி, பதிற்றுப்பத்து முதலாம் பழம்பெருந் தமிழ் நூல்களுக்கு இம்மூதறிஞர் எழுதியுள்ள உரைகள் புலவர்கள உச்சிமேற்கொண்டேத்தும் பெற்றியனவாகவும், ஆராய்ச்சி மாணவர்க்கு அரும்பசி தீர்க்கும் அமுதசுரபியாகவும் விளங்குகின்றன. மணிமேகலையாராய்ச்சி சிலப்பதிகார ஆராய்ச்சி சீவகசிந்தாமணி ஆராய்ச்சி முதலாம் இவரது நூல்கள் தமிழாராய்ச்சி இங்ஙனந்தான் நிகழல்வேண்டும் என வழிகாட்டுவனவாய் அமைந்து விளங்குகின்றன. இப்பெருங்காப்பியங்களுக்கு உரைநடையிலே சுருக்கமெழுதிச்சாதாரண தமிழறிவுடையோரும் பயன்படுமாறு செய்துள்ளார்.

ஔவை துரைசாமியவர்கள் கல்வெட்டாராய்விலும் துறைபோனவர். புறநானூற்றரசர்கள் பற்றிப் புறநானூற்றுப் பாடல்களின் முன்னுரையாக இவர் கூறியிருப்பன வரலாற்று மாணவர்க்கும் பெரும் பயன் அளிப்பன.

ஆழ்ந்த தமிழ்ப்புலமையோடு சைவசித்தாந்த சாத்திரங்களையும் முறையாகக் கற்று முதிர்ந்த அறிவுபெற்றிருக்கும் இப்பெரியார் சிவஞானபோதச் சிற்றுரைக்கு

(8ம் கலம் பார்க்க)

...தமிழ்மக்கள் சிந்தித்து நிர்மாணிக்கவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

1965-ம் ஆண்டு தனிச்சிங்களசட்டம் வந்தநாள்முதல் சுந்தரலிங்கத்தின் சித்தாந்தம் என்னவென்றால் தனித் தமிழ்அரசு ஏற்படவேண்டும் என்பதே. முதலாவது சுதந்திர இலங்கையின் மந்திரிசபையில் கடமையாற்றிய சுந்தரர் அப்படிச்சொல்லும்போது 'இது சாத்தியப்படுமா' என்று பலர் சந்தேகப்பட்டார்கள். 1958 ல் இனக்கலவரம் நடந்தபோதும் அதற்குப்பின்னரும் இன்றுவரை சுந்தரர் இந்தக்கொள்கையையே பின்பற்றி வருகிறார். 'அடங்கா தமிழர் முன்னணி'யின் தனிப்பெருந் தனி தலைவர் அவர்.

மிகச்சிறியநாடாகிய இந்த இலங்கையை துண்டு போட

வடமொழி மத்தவிலாசப் பிரகசனத்தைத் தமிழிலே மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கும், சித்தாந்த கலாநிதியவர்கள், இதுவரை ஐம்பதுக்குமேற்பட்ட பயனுள்ள நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்திருக்கின்றார்.

இன்று தமிழகத்திலே குறிப்பிடத் தகுந்த தமிழ்ப் பேச்சாளர்கள் ஒருசிலரில் ஔவை துரைசாமியவர்களும் ஒருவர். அறிவும், ஆற்றலும், ஆழ்ந்த புலமையும், சைவநெறி பேணும் சான்றாண்மையும் வாய்க்கப்பெற்ற பேராசிரியரவர்கள் ஈழம் வந்திருப்பது ஈழத்துத் தமிழர்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாகும் அவர் இன்றும் நாளையும் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும் சேக்கிழார் விழாவில் உரையாற்றுகின்றார்.

—'சோனு'

# நுண்தொழில் கலையில் 10-ஆண்டு சாதனைகள்

**யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையம் இன்று தனது 10 வதுஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

தமிழ்த்தாய் தன் குழலைப்பிடித்திழுத்து மழலைமொழிபேசிய மகனுக்கு கண்ணுடிக்குள் சந்திரனைக் காட்டி உணவூட்டியது பழையகதை. ஆனால் இன்று அதே தாயொருத்தி தன் மகவுக்குசந்திரனில் வைத்து உணவூட்டக் கூடியதாக காலம் மாறிவிட்டது. இவையனைத்துக்கும் ஒரே காரணம் சர்வதேசரீதியாக அபிவிருத்தியடைந்துவரும் தொழில் நுட்பத்துறை சாதனைகளே.

ஈழத்திலும் குறிப்பாக யாழ்குடாநாட்டில் சிறப்பாக தமிழ்மக்களுக்கு ''தொழில் நுட்பத்துறையில்'' மறக்கமுடியாத ஒரு திருநாள் 1959 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி ஆம். அன்றுதான் தமிழ்த்தாயின் துயர் துடைக்க கொழும்பு திட்டத்தின் கீழ் நியூசிலாந்து நாட்டின் உதவியுடன் யாழ். தொழில் நுட்ப நிலையம் உருவாக்கப்பட்டது. ''முயற்சி திருவினையாக்கும்'' என்னும் முதுமொழிக்கிணங்க அந்நாள் அதிபர் திரு. ம. சிட்டினபிள்ளை அவர்களின் விடாமுயற்சியின் எதிரொலியாக 59ம்ஆண்டே வணிகத்தகுதிப் பத்திரப் போதனையினங்களைமாத்திரம் உள்ளடக்கிய நுண்தொழில் நிலையமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

## கடந்த காலம்

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதற்கிணங்க வணிகப் போதனையின் மாணவர்களுடன் கொஞ்சிக் குலாவிய எமது நிலையம் 1961-ம் ஆண்டு மோட்டார் பொறிமுறை, மின் கம்பி இணைத்தல், மரவேலை, உலோக வேலை ஆகிய தொழில் வகுப்புகளையும் ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞானம், கட்டிட அமைப்பு முதலியபல எஞ்சினியரிங் துறை வகுப்புகளையும்தன்னுடனிணைத்தது மேலும் 1963-ம்ஆண்டு மின்சார எந்திரவியல், பொறிமுறை எந்திரவியல், அளத்தலும் மட்டம் பார்த்தலும், தமிழ் சுருக்கெழுத்து போதனையினங்களும் மேலதிகமாக சேர்க்கப்பட்டதுடன், ஈழத்தின் தலைசிறந்த தொழில் நுட்ப நிலையங்களுள் தனிச்சிறப்பு மிக்க ஸ்தாபனமாக எமது நிலையம் தொண்டாற்றியது. 1963-ம் ஆண்டு புதிய அதிபராக (அண்மையில் ஓய்வு பெற்ற) திரு. க. நாகலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார் அதாவது செயல் திறமையும், அநுபவமுமே இன்றைய இந்நிலைய வெற்றிகட்கு வித்திட்டன, என்றால் மிகையாகா இவ்வாறு பல வெற்றிகளைக் கொண்டாடி வரும் வேளையில் எமது அதிபராக பணிபுரிந்த திரு க. நாகலிங்கம் அவர்கள் ஓய்வு பெற்றார். பதில் அதிபராக திரு. சீ. டா. ஜயசிங்கம் அவர்களின் உழைப்பினால் மேலும் பல அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. 1969-ம் ஆண்டு-1970-ம் ஆண்டு வானொலி பழுது பார்த்தல், படம் வரைவினர் முதலிய பல போதனைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன

இன்று இந்நாட்டிற்கு மாத்திரமல்ல, இந்தயுகத்திற்கு தேவையான கட்டடக்கலைஞர்கள், எஞ்சினியர்கள், மர- உலோக வேலைநிபுணர்கள், கணக்குதிப் பதிவாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், நில அளவையாளர்கள் ஆகியோரை உற்பத்தி செய்வதில் யாழ். தொழில் நுட்பநிலையம்'' முன் நிற்கிறது.

- சபா. புஷ்பநாதன் -

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மேமாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org